
www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 8


Chanchive udgave - 8



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் - 8

விலை
10 Kroner

அட்டைப் பட விளக்கம்
மனிதனும் இயந்திரமும்
BOZORGMEHR (IRAN)

உள்ளடக்கம். பக்கம்.


1. நோக்கு. 3.
2. கண்ணீர் அஞ்சலி. 4.
3. திருக்குறள் விளக்கவுரை. 5.
4. மீண்டும் கவிஞர்களின் கவனத்துக்கு. 5.
5. தமிழ் எழுத்து சீர்திருத்தம். 6.
6. சிறார்களின் சிந்தனைக்கு (சிறுவர் அங்கம்) 9
7. விவேகமுள்ள கோபாலன் (சிறுவர் அங்கம்) 10.
8. நீதான் உலகம். (நகைச்சுவை சிறுகதை) 15.
9. கடிதங்கள். 17.
10. சமுதாயப் பிரச்சனை. 20.
11. ஒலிவர் பகுதி பற்றிய தகவல். 22
12. குறுக்கெழுத்துப் போட்டி. 23.
13. முடிவில்லாத ஆசைகள். (கவிதை) 26
14. மீராவின் தொடர்நவீனம். 28.
15. சோகமான ராகங்கள் 30.
16. பரத நாட்டியம். 31
17. டென்மார்க்குக்கு நன்றி. (கவிதை) 38.
18. சஞ்சீவின் பக்கம். 39
19.


சஞ்சீவியின் தொடர்புகளுக்கு.
CHANCHIVE
POST BOX-1205
7500, HOLSTEBRO.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோக்கு

அன்பான வாசகர்கட்கு

சஞ்சீவியினை பலரும் பல கோணங்களில் பார்வையிடுகின்றார்கள். சஞ்சீவியின் கொள்கையும் நிலைப்பாடும் என்றும் ஒன்றுதான், சஞ்சீவி தனது ஆரம்பகால நிலைப்பாட்டில் இருந்தும் விலகிக் கொள்ளவில்லை, இனியும் விலகிக் கொள்ளப் போவதுமில்லை. எந்த ஒரு தனிமனிதனின் தலையீட்டினாலோ, அல்லது சிறு குழுக்களின் தலையீட்டாலோ, சஞ்சீவி தன்னை மாற்றிக் கொள்ளத் தயாராகவுமில்லை.

"கலை கலைக்கே" என்பது எவ்வளவு தவறானதோ, அந்த அளவுக்கு தவறானது தான் "இலக்கியம் கட்சிக்காக" என்பதும், "இலக்கியம் என்பது வெறும் கொள்கை புகட்டலல்ல". இலக்கியம் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையினை வாசகர்கள் பார்க்கக் கூடிய வகையிலும், அவர்தம் பிரச்சினைகளை தெளிவுபடுத்துவதாகவும், அவற்றிற்கு தீர்வு சொல்வதாகவும் இருக்கவேண்டும். எழுத்தாளர்கள், விமர்சகர்கள் தங்கள் எழுத்துகளால் "தனிமனிதனின் தவறையோ.... குழுக்களின் தவறையோ.. அவர்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் வகையில் அமைய வேண்டுமே தவிர, வாசகர்களையும், புதிய எழுத்தாளர்களையும், மழுங்கடிக்க கூடிய வகையிலோ அல்லது ஒதுங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் அமையாமல் இருத்தல் அவசியம். முக்கியமாக சமுகப் பிரச்சனைகளை கூற முன்வந்த எழுத்தாளர்கள் இதனை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். எழுத்தாளன் தனது பார்வையினை வெளிப்படுத்த பின்னிற்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவன் சொல்ல வரும் விசயத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், "உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும்" முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

அடுத்து, கடிதங்கள் பகுதியில் அமைந்துள்ள திரு. மீரா அவர்களின் விடையம் சம்பந்தமாக அவருக்கும், அவரின் கருத்தை ஒத்த வாசகர்க்கும், ———— எமது நிலைப்பாட்டினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதழ் 7ல் திரு சௌந்தர் அவர்கள் தொகுத்துத் தந்த நக்சல்பாரிப் போராளி ரசராக் அவர்களின் கவிதையினை நாம் வெளியிட்டமை பிழையானதே. நாம் காரணம் கூறி மழுப்பிவிட முற்படவில்லை. ஆனால் நடந்து முடிந்த தவறினை உங்கள் முன் தெரியத்தருகிறோம். இடைஞ்சல்கள் மத்தியில் சிலமாத இடைவெளிக்குப்பின் மிக விரைந்து இதழ் 7 ஐ வெளியிட முற்பட்டதும், தவறுதலாக தணிக்கை செய்யப்பட்ட ஆக்கம் பதிப்புக்கு வந்தமையும், நாம் விட்டுள்ள தவறு. இதற்காக நாம் வாசகர்களாகிய உங்களிடம் மன்னிப்புக்கோருகின்றோம்.

- நன்றி -

சஞ்சீவி



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:- 18-06-1965 . மறைவு:- 05-04-1990

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், டென்மார்க்கில் Horsens நகரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சுப்பிரமணியம் ஜெயபாஸ்கரன் என்பவர் 05-04-1990 அன்று அகாலமரணமடைந்தார். இவரை இழந்து வாடும் பெற்றோர், குடும்பத்தினர், நண்பர்கள் யாவருக்கும் Horsens வாழ் தமிழ் மக்கள் சார்பிலும், சஞ்சீவியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

சஞ்சீவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருக்குறள் விளக்கவுரை

வாய்மை எனப்படுவது யாதெனில் ? யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

வாய்மை எனப்படுவது - உண்மை என்று சொல்லப் படுவது. யாதெனில் - என்னவென்றால். யாதொன்றும் - மற்றவர்க்குச் சிறிதும். தீமை இலாத - தீமை தராத. சொலல் - சொற்களைக் கூறுதல்.

பிறருக்குத் தீமை தராத சொற்களைக் கூறுவதே உண்மைச் சொற்கள்.

உரை - சாமிசிதம்பரனார்.

அறத்துப்பால் - வாய்மை - 1.

# மீண்டும் கவிஞர்களின் கவனத்துக்கு.

டென்மார்க் வாழ் தமிழ்க் கவிஞர்களின், கவிதைகளைக் கொண்ட தமிழ்க் கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்திருந்தோம். நாம் கவிஞர்களுக் கொடுத்திருந்த காலம் மிகக் குறுகியது எனவே 15-08-1990க்கு முன்னர் உங்கள் கவிதைகளை அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கவிதைகளை அனுப்பும் கவிஞர்கள் தங்கள் சொந்தப் பெயர், புனைப் பெயர் முகவரி போன்றவற்றினை மிகத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கவிதைகள் யாவும் மனிதாபிமான, சமூக உணர்வு மிக்கவையாக வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கீழ் உள்ளது.

- சஞ்சீவி -

(CHANCHIVE, P.O.BOX-1205, 7500 Holstebro.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் எழுத்து சீர்திருத்தம்

இன்று இலங்கையிலிருந்து வெளியிடப்படும் சகல வெளியீடுகளிலும் "எழுத்துச் சீர்திருத்தம்" பேணப்பட்டு வருவதையாவரும் அறிவோம். டென்மார்க்கில் வாழும் தமிழர்களாகிய நாமும் இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அறிந்திருப்பதோடு, அதைக் கைக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருப்பது அவசியமாகின்றது.

தமிழ் மொழியானது எந்தெந்த நாடுகளில் எழுதப் பட்டாலும் ஒரே வரி வடிவத் தினைக் கொண்டதாக விளங்க வேண்டும். இதுவே மொழிக்கு சிறப்பைத் தரும். இந்த வகையில் தமிழ் மொழி பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டினைப் பின் பற்றி சீராக்கம் செய்யப்பட்ட 13 எழுத்துக்களையும் நாமும் பயன் படுத்த வேண்டியவர்களாகின்றோம்.

முதலில் சீராக்கம் செய்யப்பட்ட 13 எழுத்துக்களின் பழைய, புதிய உருவத்தினை நோக்குவோம்.

| பழைய உருவம் | புதிய உருவம் |
| --- | --- |
| 1. ணா | ணா |
| 2. ணை | ணை |
| 3. ணொ | ணொ |
| 4. ணோ | ணோ |
| 5. லை | லை |
| 6. ளை | ளை |

www.tamilarangam.net



7. ரு — றா
8. ெரு — றொ
9. ேரு — றோ
10. ணு — ணா
11. ணை — ணை
12. ெணு — ணொ
13. ேணு — ணோ

இப் புதிய சீராக்கத்தில் புதிய குறியீடுகள் எதுவும் சேர்க்கப்படவில்லை. மாறாக நடைமுறையிலுள்ள குறியீடுகள் அல்லது துணை எழுத்துக்களே பயன் படுத்தப்பட்டிருப்பதை காணலாம். உதாரணமாக அக்கா என்பதிலுள்ள "கா" என்ற எழுத்தை எப்படி எழுதி வந்தோமோ, அது போன்றே அண்ணா என்பதிலுள்ள "ண" என்ற எழுத்தை "ணா" என்றாக்கி அண்ணா என எழுத வேண்டியவர்களாக உள்ளோம்.

தமிழ் மொழி எழுத்துச் சீர்திருத்த வரலாற்றைச் சுருக்கமாக ஆராயுமிடத்து. தமிழ் மொழியானது வரலாற்றின் ஆரம்ப காலத்திருந்தே, அந்தந்தக் காலச் சூழ் நிலைக்கேற்ப எழுத்துச் சீர்திருத்தம் பெற்று விளங்கியிருப்பதை காண முடிகின்றது.

தமிழ் மொழி தோன்றிய போது குறியீட்டு அடிப்படையிலான சித்திர எழுத்துக்களே முதலில் இருந்தன. பின்பு பிராமி வரி வடிவம் தோற்றம் பெற்றது. இதன் வளர்ச்சிப் போக்கில் தான் இன்றைய "வட்டெழுத்து வரி வடிவம்" தோன்றியது.

இன்றைய வட்டெழுத்து வரி வடிவத்தில் மெய்யெழுத்துக்களுக்கு புள்ளி இடும் முறையும், "கால் புள்ளி, அரைப்புள்ளி கொண்டு வந்து குறிப்பிடத்தக்க பாரிய சீர்திருத்தம் செய்தவர், இன்றைக்கு 260 ஆண்டுகளுக்கு முன்னே இத்தாலி நாட்டிருந்து வந்து தமிழ் மொழியின் பால் காதல் கொண்டு அதில் பாண்டித்தியம் பெற்று விளங்கிய "பெஸ் பாரதியார்" என்கிற திரு. வீரமாமுனிவராவார்.

உயிர் மெய்யெழுத்துக்களில் முரண்பாடான வரி வரிவடிவத்திலிருந்த 13 எழுத்துக்களையும் மாற்றி தற்போதைய புதிய சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர், 'தந்தை பெரியார்' என அன்புடன் அழைக்கப்படுகின்ற ஈ.வே. இராமசாமி நாயக்கர் அவர்களே ஆவார். இவர் தம்முடைய திராவிடர் கழக ஏடான விடுதலையில், இதை முதன் முதலில் நடைமுறைப் படுத்தினார். பின்பு தமிழக முதலமைச்சராக விளங்கிய எம்.ஜி. இராமச்சந்திரன் காலத்தில் 1978இல் தமிழக அரசு, இதை தமிழகம் பூராவும் சட்டபூர்வமாக நடைமுறைக்கு கொண்டு வந்தது.

இப்புதிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை சிங்கப்பூர் அரசானது துரிதமாக எல்லா மட்டங்களிலும் நடைமுறைக்கு கொண்டு வந்தது. ஆனால் உரிமை இல்லாத ஒரு மொழியாகத் தமிழ் மொழி மலேசியா நாட்டிலிருப்பதால் எழுத்துச் சீர்திருத்தமானது அரசாங்க ஆதரவு இல்லாமலேயே தாய் நாடான தமிழ் நாட்டையும், அயல் நாடான சிங்கப்பூரையும் பின் பற்றி, அங்குள்ள தமிழ் மக்களால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது, என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.


ஆனால் உலகில் தமிழ் நாட்டுக்கு அடுத்து தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கையிலோ இவ் எழுத்துச் சீர்திருத்தமானது நடைமுறைக்கு வர ஏனோ பல காலமாக இழுத்தடிக்கப்பட்டு இறுதியாக 1990ம் ஆண்டு தை மாதம் முதலே நடைமுறைக்கு வந்துள்ளது.

தமிழ் எழுத்து வரி வடிவமானது தமிழ் பேசும் நாடுகள் யாவற்றிலும் ஒரே மாதிரி அமைவதற்கு இச் சீர்திருத்தமானது வழி செய்யுமெனலாம். தமிழ் நாட்டில் ஒரு வரி வடிவமும், இலங்கையில் ஒரு வரி வடிவமும் இருக்கக் கூடாது. இருக்கவும் முடியாது. எனவே காலம் கடந்தாலும் இலங்கையில் நடைமுறைக்கு வந்த எழுத்துச் சீர்திருத்தத்தை நாமும் நடைமுறைக்கு கொண்டு வந்தே இன்றைய அவசிய தேவை என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை எனலாம்.

— அலென் அலோசியஸ் —
HERNING.

www.tamilarangam.net






# சிறுவர்களின் சிந்தனைக்கு....

1. தென்னாபிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடி 27வருடங்கள் சிறையிலிருந்து தற்போது (1990) விடுதலையானவர் யார்?

2. சிந்துநதி நாகரிகம் போன்ற தொன்மை வாய்ந்த இரா-ச்சியம் ஒன்று இலங்கையின் வடபகுதியில் இருந்தது அந்த இடம் எது?

3. இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்தியவர்கள் எந்தநாட்டவர்?

4. உலகில் காதல் மொழி எனக் கூறப்படும் மொழி எது?

5. இரண்டாம் உலகயுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டும் மிக விரைவாகவும் முன்னேறிய இரு முக்கிய நாடுகள் எவை?

6. உலகிலே கடல்மட்டத்துக்கும் கீழுள்ள நாடு எது?

7. இராமனின் மனைவி சீதாவை இராவணன் சிறைவைத்த இடத்தில் எந்தவகைப் பூமரங்கள் அதிகமாக இருந்தன?

8. எலுமிச்சம் பழத்தில் எந்த அமிலம் அதிகமாகவுள்ளது?

9. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள கடல் இணைப்பிற்கு என்ன பெயர்?

www.tamilarangam.net



# விவேகமுள்ள கோபாலன்



யாழ்ப்பாணத்தின் அழகிய கிராமமான தெல்லிப் பளையில் பன்றிலியென்றொரு இக்கிராமம் இருந்தது. அங்கே கோபாலன் என்றொரு சிறுவன் வாழ்ந்து வந்தான்.

அழகும் துடிப்பும் கொண்ட அந்தச் சிறுவன் படிப்பு விளையாட்டு மட்டுமன்றிப் பெற்றோருக்கும், அந்த ஊருக்கும் ஒரு உதாரண குணமுள்ள சிறுவனாக வாழ்ந்து வரலானான்.

அவன் தனது சக தோழர்களுடன் அவ்வூர் பிள்ளையார் கோவிலின் பின்புறத்திலே மாலைப் பொழுதில் விளையாடுவான். அவ்வூரில் அருள்மணியென்றொரு இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் நேர்மையும், கல்வியறிவும் மிக நிரம்பியவனாக விளங்கினான். அருள்மணிக்கு சிறுவர்கள் மிகவும் நன்றாகப் பிடிக்கும். அதனால் மாலைப் பொழுதில் சிறுவர்களோடு விளையாடுவதுடன், அவர்களை அமரச் செய்து பல கதைகளையும் விஞ்ஞான அறிவுபூர்வமான விளக்கங்களையும் புரிய வைப்பான். அதனால் கோபாலனுக்கும் அவன் தோழர்களுக்கும் அருள்மணியை நன்றாகப் பிடித்துப் போயிற்று.

அருள்மணிக்கும் கோபாலனுக்கும் இடையில் சில முரண்பட்ட கருத்துக்கள் இருந்தன. அவைபற்றி இருவரும் தற்கப்படுவார்கள். அவையென்னவெனில், அருள்மணி சொல்லுவான் "நேர்மையும், படித்த கல்வியும் தான் வாழ்க்கைக்கு முக்கியம்" என்று, கோபாலன் சொல்லுவான் "பாடசாலை அறிவோடு வாழ்வது என்பது சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை வாழ்க்கை. அதனால் அறிவு மூளையைப் பண்படுத்த, அத்தோடு நேர்மையான சுதந்திரமும், விவேகமும் கொண்டு

www.tamilarangam.net



உலகத்தைப் படித்தாற்றான் உலகில் சந்தோசமாக வாழமுடியுமென்று எனது தாத்தா அடிக்கடி சொல்லுவார். அது தான் சரி" என்று.

நாட்கள் நகர்ந்தன. அருள்மணி பல வேலைக்கு மனுப்பண்ணியும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை, அதனால் அருள்மணி சோர்வடைந்திருந்தான். ஒரு நாள் விற்பனை முகவர் வேலைக்கு மனுப்பண்ணியபடி நேர்முகத் தேர்வுக்குச் சென்றிருந்தான். அங்கே பல இளைஞர்கள் வேலை தேடி வந்திருந்தார்கள் அந்த இளைஞர் கூட்டத்தைக் கண்டதும் இருந்த நம்பிக்கையும் இழந்து சோர்ந்து போயிருந்தான் அருள்மணி.

அவ்வேளை இளைஞர்களின் மத்தியில் வந்த மேற்படி நிறுவன உயர் அதிகாரி, அவர்களை உன்னிப்பாகப் பார்த்து அவர்களில் பத்துப் பேரை தெரிந்து கொண்டு மற்றவர்களைப் போகும்படி சொல்லிவிட்டார். அந்தப்பேரில் அருள்மணியும் ஒருவன். அதன் பின் அந்தப் பத்துப் பேரையும் உள்ளே வரும்படி அழைத்து அவர்களின் சான்றிதழ்களையும் பெறுபேறுகளையும் பார்த்தார். அதில் ஆறுபேர் தெரிவாகினர். அருள்மணி உட்பட. அதன் பின் கல்வி சம்பந்தமான பல கேள்விகளைக் கேட்டார். அதற்கு அருள்மணியும் இன்னும் இருவரும் மிகச் சாதுரியமாகப் பதிலளித்தனர். இதனால் அருள் மணியும் மற்ற இருவரும் அதில் தெரிவாகினர், வேலைக்கு ஒருவர் மட்டுமே தேவை. அதனால் விவேகம் சம்பந்தப்பட்ட கேள்வியொன்றைக் கேட்டார். அந்தக் கேள்வி இதுதான். "மாம்பழத்தைக் கொய்யாப்பழமாக எனக்குக் காட்ட உங்களில் யாரால் முடியும்?. இந்தக் கேள்விக்கு மூவருமே பதிலளிக்கவில்லை. அதனால் அதிகாரி ஒரு நாள் அவகாசம் கொடுத்தார்.

வீட்டிற்கு வந்த அருள்மணி சாப்பிடக் கூட மனமின்றி தான் படித்த புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். பலனில்லை. விஞ்ஞான ஆராய்ச்சிகளில் மூளையை ஓட விட்டான். அதுவும் பலன்தரவில்லை. வழக்கம் போல மாலையானதும் பிள்ளையார் கோவிலடிக்கு வந்து ஒரு இடத்தில் அமர்ந்த கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். இந்த வேலையும் கைநழுவிப் போய் விடப் போகுதே என்பது தான் அவனது கவலை.

www.tamilarangam.net



எந்த நாளும் தங்களுடனேயே பொழுதைக் கழிக்கும் அருள்மணியன்று இன்று மட்டும் தனிமையிலே உட்கார்ந்திருப்பது கோபாலனுக்கும் அவன் தோழர்களுக்கும் என்னவோ போலிருந்தது. எல்லோரும் அருள் மணிக்கு அருகில் வந்தார்கள். கவலை குடி கொண்ட அருள் மணி முகத்தைக் கண்டதும் அவர்களுக்கும் கவலையாகிப் போய்விட்டது. அவ்வேளை கோபாலன் தான் மிக அருகில் வந்து ஆதுரத்துடன் அருள்மணியை விசாரித்தான்.

எந்த நேரமும் கலகலப்பாகவே காணப்படும் அந்தச் சின்னஞ்சிறு நெஞ்சங்கள் இன்று தனது துன்பத்தில் பங்கு கொண்டு அவர்களும் சோர்ந்து விட்டதைக் கண்ட அருள்மணிக்கு மிகவும் விசனமாகிப் போய்விட்டது. அதனால் அருள் மணி தனக்கு அன்று நடந்த நேர்முகப் பரீட்சையும் விசித்திரமான கேள்வியையும் பற்றி அவர்களுக்கு விளக்கினான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் முகத்தை வைத்துக் கொண்டு மிக அக்கறையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் அவதானமாகக் கேட்ட பின் அந்த மாம்பழ கொய்யாப்பழத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார்கள். ஆனால் கோபாலனுடைய கோணம் மிகவும் வேறாகவிருந்தது.

அருள்மணிக்கருகிலே வந்த கோபாலன் கேட்டான் "இந்தக் கேள்வி கல்வி சம்பந்தப்பட்டதா? விவேகம் சம்பந்தப்பட்டதா? அறிவு சம்பந்தப்பட்டதா? தந்திரம் சம்பந்தப்பட்டதா?

அருள்மணிக்கு கோபாலனுடைய இந்தக் கேள்வி மனதில் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. "கோபாலன் உனது கேள்வி எனக்கு விளங்கவில்லை. எல்லாமே கல்வி சம்பந்தப்பட்டது தானே? என்றான்.

கோபாலன் சொன்னான் "இங்குதான் பிழை விடுகிறீர்கள், நான் நினைக்கின்றேன் இது; விவேகம் தந்திரம் பொருந்திய கேள்வியாகத் தான் இருக்க வேண்டுமென. அதனால் கொஞ்சம் அந்தவகையில் சிந்தியுங்கள் நானும் யோசிக்கின்றேன்." என்று சொல்லிவிட்டு அங்கிருந்த ஒரு மாமரத்தைப் பார்த்துக் கொண்டு சிந்தித்தான்.

சில நாழிகை சென்றது. திடீரெனக்

www.tamilarangam.net



புதிய தமிழ் ஆண்டுக்கு "பிரமோதூத" ஆண்டு என்று பெயர். இது கலியுக ஆண்டு 5092 ஆகும். திருவள்ளுவர் ஆண்டு 2021. "சாலிவாகனம்" 1912. "கொல்லம்" 1165. பசலி 1390. ஹிஜிரி 1410. 60 ஆண்டுகளைக் கொண்ட தமிழ் ஆண்டடிவ் இது 4 வது ஆண்டு. வட இந்தியாவில் இதை 'சித்திர பானு ஆண்டு' என்று சொல்வர்.

நன்றி- ராணி இதழ்

"கண்டு பிடித்து விட்டேன், நான் கண்டுபிடித்து விட்டேன்" என்ற குரல் கேட்டது. எல்லோரும் குரல் வந்த திசையை நோக்கினார்கள். அங்கே கோபாலன் மிகவும் குதூகலமாக குதித்துக் கொண்டிருந்தான்.

அவனது தோழர்கள் கோபாலன் நெருங்கி என்ன? என்ன? என்று விபரம் கேட்டார்கள். ஆனால் அருள்மணிமட்டும் அந்த இடத்திலேயே அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அருள்மணிக்கு கோபாலனது கண்டு பிடிப்பில் நம்பிக்கை இருக்கவில்லை. கிட்ட வந்த தோழர்கள் விலகிக் கொண்டிட அருள்மணி அருகில் வந்த கோபாலன் "கண்டுபிடித்து விட்டேன்" அண்ணா" என்றான்.

என்ன கண்டு பிடித்தாய்? சரி சொல்லு என்றான் அருள்மணி. உடனேயே அருள்மணி அருகில் அந்த மாமரத்தண்டை இழுத்துச் சென்ற கோபாலன் இதோ பாருங்கள், இதிலிருக்கும் மாங்காயைப் பாருங்கள். இது கொய்யாப்பழமா? இல்லைக் கொய்தபழமா? என்று கேட்டான். பின் ஒருமாங்காய்க்காயைப் பிடுங்கிக் கையில் வைத்துக் கொண்டே அது கொய்யாப்பழம், என் கையிலிருப்பது கொய்த பழம். என்றான்.

உடனே ஆனந்தத்தால் கட்டித் தூக்கிக் கொண்ட அருள்மணி "கோபாலன் உனது விவேகத்தை மெச்சுகிறேன், உலகில் கல்விமட்டுமல்ல, விவேகமும் தாய தந்திரமும் தான் வாழ்க்கைக்குத் தேவையென்பதை ஏற்றுக் கொள்ளுகின்றேன். நிட்சயமாக நான் அந்த வேலையைப் பெற்றுக் கொள்வேன். உனது திறமை எனக்குப் பயன்பட்டது என்றான்.

www.tamilarangam.net



மறுநாள் குறிப்பிட்ட நிறுவனத்தில் அருள்மணி கோபாலனது விளக்கத்தைக் குறிப்பிட்டு வேலையைப் பெற்றுக் கொண்டான்.

அன்று முதல் கோபாலன் விவேகி கோபாலன் என அழைக்கப்பட்டான்.

— சுவரியோன் —

## சிறார்களின் சிந்தனைக்கு விடைகள்.

1. நெல்சன் மண்டேலா.
2. வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சுற்றாடல்.
3. ஆங்கிலேயர்.
4. பிரஞ்சு மொழி
5. யப்பான், ஜேர்மனி.
6. கொலண்ட்
7. அசோகா.
8. அமிரேற் ஆமிலம்.
9. பாக்குநீரிணை.

உலகிலேயே அகலமான சாலை பாரிஸ் நகரத்தில் இருக்கிறது. சாம்ப்-டீ-எலிஸீஸ் என்ற இந்த சாலையில் ஒரே நேரத்தில் 10 பஸ்கள் போகக் கூடிய அளவிற்கு அகலமான சாலையாக உள்ளது.

உலகிலேயே மிக அதிகச் செலவில் தயாரிக்கப் பட்ட படம் 'சூப்பர் மேன்' தான் இதற்கு 600 இலட்சம் டொலர் செலவானது.

உலகிலேயே முதல் பெண்டாக்டர் அமெரிக்காவைச் சேர்ந்த எலிசபெத் பளாக்வெல். 1849 ஆம் ஆண்டு மருத்துவம் படித்துப் பட்டம் பெற்றார்.

ஜப்பானியரின் திருமண விருந்தில் தவறாமல் இடம் பெறும், "ஸிப்ரீம்" என்ற மீன் வகையாகும். இந்த மீனைக் குறிக்கும் பெயரின் பொருள் (ஜப்பானிய மொழியில்) "மகிழ்ச்சி" என்பதாகும்.

— வீரகேசரி —

www.tamilarangam.net



நகைச்சுவை சிறுகதை

# நீதான் உலகம்



K-R, HOISTEBRO

"தங்கம்மா"

பெயருக்கேற்றாற்போல் இணைந்திரும் அவள் தங்கம்தான். கணவன் வேலுப்பிள்ளையை அவள் மணம் முடித்து இருபது வருடங்களாகியும் பிள்ளைப் பாக்கியம் இல்லை.

பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் மகள் கல்யாணி தங்கம்மா வீட்டில் பொழுதில் பெரும் பகுதியைக் கழிப்பாள். பிள்ளை இல்லை என்ற குறை இல்லையென்றாக்கிவிட்டது கல்யாணியாள்.

வருமானம் பற்றாக்குறைகாரணமாக தங்கம்மாவுக்கும் வேலுப்பிள்ளைக்குமிடையே சிறு சிறு தகராறுகள் ஏற்படுவது வழக்கம். மனைவியிடம் மிகுந்த பயம் உள்ளவர் இருந்தாலும் பயத்தை வெளிக்காட்டாமல் மனைவியை ஏசத் தொடங்கி இறுதியில் அவளது பத்திரகாளி வேடத்துக்குப் பெட்டிப்பாம்பாகி அடங்கிவிடுவார்.

வேலிக் கதியால்கள் பட்டுப்போய் சரிந்துவிட்டிருந்தன. புதிய கதியால்கள் போடுவதற்காக வெட்டுக்கத்தியை வெகு நேரமாகத் தேடியும் அகப்படவில்லை.

"தங்கம்மா . . . தங்கம்மா . . . என்னடியாத்தை நான் கூப்பிடுறன். கேளாத மாதிரி இருக்கிறாய்."

"கேக்குது என்னவிடயம் சொல்லுங்கோ."

"இல்லை இந்த வெட்டுக்கத்தியைக் கண்டனியே"

"ஓமப்பா இவள் அன்னம் கலியாணி தேங்காய் உடைக்க வேண்டு வாங்கிக் கொண்டு போனவள் தரேல்லை. மறந்து போனள் போல. இஞ்ச கறி அடுப்பில நீங்களொருக்காப் போய் வாங்கியாங்கோ"

வேலுப்பிள்ளைக்குத் தாறுமாறான கோபம் பொங்கியெழுந்தது.

"என்னடி சொல்லுறாய். கத்தியைக் கொடுத்ததும் பத்தாமல் என்னைப் போய் வாங்கியரச் சொல்லுறாய். நான் எத்தினை தடவை சொன்னனான் என்னைக் கேளாமல் எந்தப் பொருளையும்

www.tamilarangam.net


ஆருக்கும் குறுக்காலை போண்டு. என்ன சொல்லிக் குடுக்கிறது தெரியேல்ல. மரியாதையாக் கத்தியை வாங்கியா தெய்யா." வேலுப்பிள்ளை முகம் சிவக்க ஆவேசத்துடன் கத்தினார்.

எடிபிடி என்ற வார்த்தைகள் தங்கம்மாவுக்குப் பிடிக்காத பிரசாரங்கள்.

"என்னதான் சொன்னன்? நான் என்ன எடிபிடியே. நீர் வாய்க்கு வந்தபடி பேசுறதுக்கு என்னை அப்பு ஆச்சி பெத்துவிடேல்ல. கதைக்கிறதை மரியாதையாயாக் கதைக்க வேணும்."

மனைவியின் ஆவேசப் பேச்சுக்கள் அவருக்குச் சிறிது பயத்தை ஏற்படுத்தியது. பயத்தை வெளிக்காட்டாமல் "தங்கம்மா.... சின்னக் கதைக்காதை கண்டியோ. வாய்க் கொழுப்புக் காட்டினால் குடும்பி அறுத்துப் போடுவன். கவனம்." வேலுப்பிள்ளைக்கு மனைவியைப் பேசும் போது முன்பிருந்த பயம் குறைவிட்டிருந்தது.

பருவதத்தின் தொணதொணப்புத் தாங்கமுடியவில்லை. கத்தியைக் கல்யாணியிடமிருந்து வாங்கிக் கொடுத்துவிட்டால் தொல்லை தீர்ந்துவிடும் என்று நினைத்தவராக சற்றும் யோசியாமல் குரலை உயர்த்திவிட்டபடி இருந்தபடியே, "பிள்ளை கல்யாணி!... பிள்ளை"..

தங்கம்மாவின் குரல் கேட்டு கல்யாணி "என்னம்மா!" என்று குரல் கொடுத்தாள்.

"உந்த வெட்டுக்கத்தியைக் கொண்டா பிள்ளை. கெதியாக் கொண்டா. இத்தினை நாளைக்குத்தான் நான் பொறுக்கிறது. இண்டைக்கு ரண்டில ஒண்டு பாத்திடுறன்."

தங்கம்மாவின் ருத்ரதாண்டவக் கோலம் வேலுப்பிள்ளையைக் கிலிகொள்ளச் செய்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"ம்... இவள் கத்தியைக் கொண்டா என்று சொல்லுறதைப் பார்த்தால் என்னை வெட்டியும் போடுவாள் போல. முகமும் ஒரு மாதிரியாய்த்தான் கிடக்கு. கண்டால் பிழை. மெல்ல மாறுவம்". என்று நினைத்த வேலுப்பிள்ளை ஓசைப்படாமல் கால்கள் பிடரியில் அடிபட வீட்டைவிட்டு ஓடுகிறார். எதிரில் அவரது இளைய மகன் கந்தசாமி பழைய துருப்பிடித்த சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

"எட கந்தசாமி மண்ணெண்ணெய் கிடைக்கும் எண்டொருக்கா உங்கை கேட்டுப்பார்த்து விட்டுவா."

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவினருக்கு எழுதிக் கொள்வது:

மலர் 7 கைவசம் கிட்டியது, நன்றிகள். "கட்சி சார்பற்ற" (மலர் 1) சரியான நடுநிலைக் கொள்கையினை கடைப்பிடிக்கவே விரும்புகின்றோம்' (மலர் 7) என்று ஆசிரியர் தலையங்கம் தாங்கிவரும் ஓர் சஞ்சிகையில் நக்சல்பாரி போராளி கவிஞர் ரசராஜவின் தொகுப்பை எந்த நிலைப்பாட்டின் கீழ் வெளியிட்டுள்ளீர்கள் என தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

சஞ்சீவி ஓர் இலக்கியப்பத்திரிகை; இலக்கிய சரம் கொண்ட கவிதை என்றவகையில் அதை வெளியிட்டிருந்தால் வெறும் போராளி அல்லது அரசியல் குழு கவிஞர்களின் கவிதை நயம் கொண்ட கவிதைகளை வாசகர்கள் தொகுத்து அனுப்பினால், அதே போராளிக் குழுவின் பெயருடன் சஞ்சீவி பிரசுரிக்குமா?

இலங்கையில் உள்ள போராளிக் குழுக்களை ஆதரித்தாலோ அன்றி எதிர்த்தாலோ, அது சஞ்சீவியின் வளர்ச்சிக்கு சில எதிர்ப்பாடுகளை உருவாக்கும் என எதிர்பார்க்கும் நீங்கள், எவ்வாறு இந்தியாவில் உள்ள ஓர் போராளிக் குழுவின் கவிதையினை வெளியிடத் துணிந்தீர்கள் என்பதை நோக்கும் போது யாருக்கும் சஞ்சீவியின் நிலைப்பாட்டை சந்தேகிக்க இடம் உண்டு.

நடுநிலையாளராக விளங்குவோம் (ஆனால் அணு ஆயுதம் விற்போம்) என்று டென்மார்க்கில், சீர்திருத்தம் பேசுவோம் (ஆனால் பெற்றோர் சம்மதப்படி ———— சீர்வரிசையுடன் திருமணம் செய்வோம் என்று தமிழ்த்தனத்தின் இரட்டைத்தன்மை (Double moral) க்கு சஞ்சீவி பலியாகாமல் இருப்பது ஆரோக்கியமானது.

உண்மையில் நீங்கள் அவ்வியக்கத்திற்கு ஆதரவாளர்கள் எனில்

www.tamilarangam.net



மலர் 8ஐ ஆவது உங்களை வெளிக்காட்டுவது சாலச்சிறந்தது. காரணம் அதற்கு ஆதரவானவர்கள் உங்களுடன் கைகோர்த்து சஞ்சீவியை வளர்க்கவும், எதிர்ப்பவர்கள் சஞ்சீவியில் இருந்து ஒதுங்கிக் கொள்ளவும் உதவியாக இருக்கும். கூடவே "பக்கம் சார்ந்தே எழுதுவோம்" என துணிந்து உங்கள் பக்கத்தை வலியுறுத்தி எழுதும் போது, அது பத்திரிகையின் நேர்மைத்தன்மையை மென்மேலும் வளர்க்கும்.

எனது ஐயப்பாடுகளை கேள்வி பதில் பகுதி மூலமோ அன்றி வாசகர் கடித பகுதி மூலமோ சஞ்சீவி ஆசிரியர் குழு தீர்த்து வைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

* * * *

மலர் 7 சஞ்சீவியின் சில படைப்புக்கள் பற்றி:-

<u>முகங்கள்</u>:- தேவனுக்கு என் பாராட்டுகள். நல்ல எழுத்தோட்டம். "துள்ளல் நடை" ஓர் சிறுகதையினூடு பல பிரச்சனைகளை தொட்டுச்சென்ற பாங்கு என்னை மிகவும் கவர்ந்தது. முடிவுடன் மட்டும் மனம் ஒன்ற மறுக்கின்றது. ராஜாக்கள் எல்லோருமே தற்கொலை செய்வதால் ராணிக்களைத் தானே "அதே பழைய யாழ்ப்பாணத்துள்" தள்ளப்படுகின்றார்கள். "தப்புதல்" (Escapisum) மூலம் பிரச்சனைகள் தீர்ந்துவிடாது. தற்கொலைகூட ஓர் வகைத்தப்புதல் தானே. இவ்வாறான எழுத்தோட்டத்துடன் வேறும் தேவனின் கதைகளை எதிர்பார்க்கின்றேன்.

<u>மூக்குக் கண்ணாடி</u>:- இந்திரனின் நல்ல நகைச்சுவைக் கதை. ஆனால் இடை இடையே "சஞ்சீவியை" யாழ்ப்பாணத்தில் படிப்பதாக காட்டப்படுவது, டென்மார்க்கின் சஞ்சீவியை கையில் வைத்துக் கொண்டு வாசிக்கும் ஓர் வாசகனை திடீரென கதைப்புலத்தில் இருந்து திசை திருப்புகிறது. இதை தவிர்த்தல் நல்லது. இதே போன்று தேவனும் டெனிஸ் குரூன், ஜேர்மன் MARKக்கு மாறியுள்ளது.

<u>ஓவியங்கள்</u>:- முன் அட்டை, மீராவின் தொடர் நவீனம், முகங்கள் SUPER.

<u>தமிழ்ப் பிரயோகங்கள்</u>:- தமிழ் பிரயோகங்கள் பல நன்மை, தீமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. எழுத்தாளர்கள் அதைப் பற்றி கவலைப்படாத போது, அல்லது தம் வேகத்தை காட்ட முயலும் போது அதை சஞ்சீவியும் அப்படியே பிரசுரிக்கும் போது பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டி வரலாம். ஓர் ஆசிரியர் குழுவிற்கு தணிக்கை செய்யும் உரிமையுண்டு. அதில் அக்கறை செலுத்துதல் நல்லது. உ+ம் :- இம் முறை வந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இளிச்ச வாயன்களா" என்று பதம்.

அன்புடன்
மீரா

அன்பான சஞ்சீவிக்கு!


6வது இதழில் எனது "சந்தேகம்" என்ற கவிதை பற்றிய திரு. உதிசபாபதியின் விமர்சனக் கடிதம் பற்றி சஞ்சீவிக்கும், வாசகர்களுக்கும் எனது கருத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தும்மல் பற்றி எல்லா மக்களின் மத்தியிலும் நடைமுறையில் ஒரு பொதுவான கருத்து இருக்கின்றது. இது பற்றிய பேச்சுகளும், விமர்சனங்களும் இன்றும் மக்கள் மத்தியில் நாம் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. இவர்கள் எல்லோரும் வள்ளுவனின் 'காமத்துப் பாலும், கலாநிதி கந்தையாவின் "இலக்கிய வளமும்" படித்தவர்களா? இல்லை! நான் திருக்குறள் படித்திருக்கின்றேன். ஆனால் கலாநிதி கந்தையாவின் இலக்கிய வளம் படிக்கவில்லை. இந்தக் கவிதை எனது சொந்த அனுபவத்தில் எழுதப்பட்டதொன்று. இந்த கவிதையினை எழுதி சஞ்சீவி பத்திரிகைக் குழுவிடம் நான் ஒப்படைத்த போது, பத்திரிகைக் குழுவினர் சிறு மாறுதல்களுடன் அதனைப் பிரசுரித்தார்கள். அந்த மாற்றம் கூட எனது சம்மதத்துடன் தான் மாற்றம் செய்யப்பட்டது.

திரு. உதிசபாபதியையும், வாசகர்களையும், நான் அவர் கூறிய கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. மற்றவர்களின் தரத்தையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. மாறாக திரு. உதிசபாபதி எழுதிய கட்டுரையினையும், அவருடைய விமர்சனக் கடிதத்தையும் பார்க்கும் போது, ஒன்றுக்கொன்று முரண்பாடான தன்மையினை கண்டு கொள்ள முடிகிறது. அத்துடன் அவர் தனது கட்டுரையிலும், விமர்சனத்திலும் பயன்படுத்திய வன் சொற்கள் உதாரணமாக தேவடியாளத்தனம்... கரடி விட்டு... போன்ற சொற்கள் வாசகர்களையும், எழுத்தாளர்களையும் இழிவு படுத்துவதாக உள்ளது. இதனை சஞ்சீவியும் பிரசுரிப்பது, வாசகர்கள் மத்தியில் சஞ்சீவியின் தரத்தைக் குறைத்துக் கொள்வதாகவுள்ளது.

எனவே சஞ்சீவியும், உதிசபாபதியும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
- நந்தா -



www.tamilarangam.net



# சமுதாயப் பிரச்சனை

எமது சமுதாயத்தில் பிரச்சனைகள் பல வழிகளில் தோன்றுகின்றன. மற்றவர்களை பிழை கூறுவது, மற்றவர்களின் நலனை சிந்தனையும் எண்ணாது எமது நேரிய கண்ணோட்டத்தில் நடப்பது, உறுதியற்ற பேச்சுக்கள், மனதின் அலல நிலைகள் இப்படியாக எமது சமுதாயத்தில் பிரச்சனைகள் பல வழிகளில் தோன்றுகின்றன.

ஒரு மனிதன் சமுதாயத்தில் மனிதனாக வாழ வேண்டுமாயின் அவன் தனது ஆணவம் அதிகாரத்தினை கைவிட வேண்டும். ஆணவமும் அதிகாரமும் இல்லாதவன் தான் என்றும் சிரஞ்சீவியாக வாழ முடியும். சோம்பேறித்தனமாக வாழ்ந்து கொண்டு மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படக் கூடாது. அவலம் என்பது மனிதர்களை ஆட்டிப்படைக்கும். உறுதியான மனம் தேவை. மனிதர்களுக்கு உறுதியான மனநிலை இல்லாவிடின் எமக்கும் விலங்கினங்களுக்கும் வித்தியாசமிருக்காது.

நேரம் எடுத்து சிந்தனையில் செலவிடு. அந்த நேரத்தில் அடுத்தவனை புறணி பாடாதே. அடுத்தவனை புறணி சொல்லும் உனது வாழ்க்கையில் முழுமையிராது, அதனால் சமுதாயத்திற்கும் பயனிராது. ஒரு மனிதனின் கடந்த கால வாழ்க்கை தான் சமுதாயத்திற்குப் பாடமாக அமைகின்றது. ஒருவன் நல்லவனாயினும் சரி கெட்டவனாயினும் சரி அவனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றி நீ சிந்தித்துப் பார். சரியா, பிழையா என்று அதை-

www.tamilarangam.net



பு பற்றி சரியான முறையில் சிந்திப்பாயானால் உனக்கும் பயனளிக்கும்.

ஒருவனின் கால வரை கூடலாம் குறையலாம். ஆனால் அவன் அந்தக் காலத்தில் செய்யும் காரியங்கள் சமுதாயத்திற்கு நன்மையுள்ளதாக அமைய வேண்டும். இருக்கும் வரை இருந்து விட்டு இறுதியில் சமுதாயத்திற்கும் குடும்பத்திற்கும் சுமையாக மரணத்தை தழுவக்கூடாது. அப்படியான ஒரு மனிதனின் வாழ்க்கை சமுதாயத்திற்கு பிரச்சனைகளை உருவாக்கும்.

நாம் நடக்கும் பாதையில் ஏதாவது கல்லு முள்ளு இருந்தால் அதை நாமாகத்தான் கண்டறிய வேண்டும். நாம் வாழும் உலகம் மிகப் பெரியது. ஆனால் நடக்கும் பாதையோ மிகச் சிறியது. அதைக்கூட குழி தோண்டி எம்மை விழுத்த நினைக்கும் மனிதர்களும் எமது சமூகத்தில் வாழ்கிறார்கள். எந்த மனிதனும் வெளிப் பார்வைக்கு நிலவு போல காட்சி தருவான். பழகிப் பார்த்தால் நட்பு வைத்தவன் தனிமைப் படுத்தப் படுவான். நண்பனைத் தெரிவு செய்யும் போது அறிவை விருத்தி செய்ய வேண்டும். இல்லாவிடின் சமூகத்தில் பிரச்சனை உள்ள மனிதனாகத்தான் இருக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

எங்களில் பலர் தாங்கள் தவறுகளை தவறென்று ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி இருந்தால் எமது தமிழ்ச் சமூகம் இப்படி வேடிக்கைக்குரிய நிலைக்கு வர வேண்டிய அவசியமிருக்காது. தவறைத் தவறென்று சுட்டிக் காட்ட வேண்டிய மனப் பக்குவம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டும். இதனாலேயே சமுதாயப் பிரச்சனைகளை ஓரளவு தவிர்க்க முடியும்.

அடுத்து, எமது சமுதாயத்தில் சீதனப்

www.tamilarangam.net



பிரச்சனை மிகப் பெரிய பிரச்சனையாகவுள்ளது. அதை முற்றாக கட்டுப்படுத்த வேண்டுமாயின், இன்றைய ஒவ்வொரு இளைஞனும் சரியான பாதையில் வழி நடக்க வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் தமது கால் எல்லை வரும் போது தாமாக இயங்க வேண்டும். இறுதி வரைக்கும் பெற்றோரை நம்பியிருக்கக் கூடாது. தாமாக இயங்க வெளிக்கிடும் போது அது தனக்கும் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். பணம் இருக்கும் போது தான் பணத்தை சேகரிக்கும் எண்ணம் வரும். அது எந்த வழியாக கிடைத்தாலும் பரவாயில்லை என்று நினைக்கும் இளைஞர்களும் உண்டு. சீதனம் வேண்டி பணத்தை சேர்க்கும் இளைஞர்களும் உண்டு. நேர்மையான வழியில் உழைத்து பணத்தை சேர்க்கும் இளைஞர்கள் சீதனம் வேண்ட வேண்டிய அவசியமில்லை. பொருளாதாரப் பிரச்சனையால் தான் சீதனப் பிரச்சினை சாதிப் பிரச்சனை உருவாகின்றது. எமது சமூகத்தின் பிரச்சனைகளை மக்களாகிய நாம் தான் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்னை உணர்ந்து செயல்படுவானாயின் சமுதாயத்தில் எந்தப் பிரச்சனையும் இருக்காது.

முற்றும்

நீ. றெபின்.

-Langa-

# ஓவியப் பகுதி பற்றிய தகவல்


ஓவியம் பகுதியில் இம்முறை ஓவியம் ஒன்றும் வெளியாகவில்லை. காரணம் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஓவியங்கள் இம்முறை கறுப்பு மையினால் வரைந்திருக்காமையே ஆகும்.

தயவு செய்து தொடர்ந்து நீங்கள் வரையும் ஓவியங்களை கறுப்பு மையில் வரைந்து அனுப்ப வேண்டும். இப்படி நீங்கள் செய்யும் போது, உங்களது ஓவியத்துறையில் வளர்ச்சி ஏற்படுவது மட்டுமல்லாமல், புத்தம் வெளியிடும் எங்களுக்கும், உதவியாக அமையும்.

- சந்தினி -

www.tamilarangam.net





# குறுக்கெழுத்துப் போட்டி : 7.

சுதந்திரியின் குறுக்கெழுத்துப்போட்டி இல: 7. அனைவரையும் அன்புடன், தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள் பல கூறி போட்டிக்கு அழைக்கிறது:-

போட்டிக்காக நீங்கள் செய்யவேண்டியது; குறுக்கெழுத்துக் கட்டங்களை பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன, அவற்றுக்கான சரியான பதில்களைத் தெரிவு செய்து கட்டங்களை நிரப்பவேண்டியதேயாகும்.

**கேள்விகள்: இட - வலம்**

3-29: நாங்கள் தமது தொல்பொருட்காட்சிச்சாலைகளில் "—" வாய்ந்த பொருட்களை பாதுகாப்பது வழக்கம். இது குழம்பியுள்ளது.

4-25: இத்தகைய தன்மை கொண்டவர்கள் எதிலுமே திருப்தியடையார்.

5-31: எமது நாட்டில் 'இக்'கல்மரப் பலகையும் 'யாங்குபோன்று' நாயாடம் செய்வதற்கும், புது வீடுகள் கட்டும் போது தளைப்பலகை அமைப்பதற்கும் பயன்படுகிறது.

7-46: தமிழ், சிங்களப் புத்தாண்டின் தொடக்க மாதம் இதுவே.

14-40: அழகு அழிக்கப்படும் போது அதை இப்படியும் கூறுவர். இது தனது நிலையாற் குழம்பியுள்ளது.

16-51: எமது நாட்டின் மொத்தான அகவளர் விருட்சத்தின் கரிய பகுதியே "———" ஆகும். ஆனால் இதுவும் ஏழ்மைப் போல் இடம் மாறியுள்ளது.

19-6: 1/1000 இது "தசம்" என்றால் 1/100 "—" ஆகும்.

32-47: இதனை எதிலும் "—" செய்தலில் பரம்பரையுண்டாகும். ஆனால் இது மனிதனைப் போல் குழம்பியுள்ளது.

42-50: இந்த முயற்சியால் பல நாடுகளை ஆட்டங்கொண்டுள்ளன.

48-44: எமது கால் அடிப்பாகத்தின் பின்பகுதியை இப்படி அழைப்பர்.

43-36: பனை நெருக்கடியாய இப்படியும் அழைப்பர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கவனியுங்கள்! போட்டியின் விபரங்களும், நிபந்தனைகளும்:

1. சஞ்சீவியின் ஆசிரிய, செயற்குழு தவிர்ந்த யாவரும் பங்குகொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப்பக்கத்திலுள்ள கட்ட அஞ்சற் பத்திரத்தை பூர்த்தி செய்து . . .க்கு முன்னதாக சஞ்சீவிக்கு அனுப்பிவைத்தல். (முகவரி அஞ்சற்பத்திரத்தில் உள்ளது)
3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக் கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் சஞ்சீவியின் நடுவர் குழுவினால் தெரிவாதல்.
5. மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
6. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
7. சரியான விடையும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும் அடுத்துவரும் சஞ்சீவி இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு சஞ்சீவியால் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும். (பண அன்பளிப்புக் கட்டணை)



இது[illegible] போட்டி இல: 6ம் இலக்கம்.
பரிசில்கள் பெற்றுக்கொண்டவர்களின்
விபரங்களும், போட்டி இல: 7ம் தரம்.
தாமதத்திற்கும் வருந்துகிறேன்.
சஞ்சீவியின் அன்பு வாசகர்கள்
யாவருக்கும் எனது இதய பூர்வமான
நல்ல சித்திரைத்தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள் பல உரித்தாகுக.
மேலும் யாவருக்கும் நன்றி
களையும், நல் வணக்கத்தினை
யும் தெரிவித்துக் கொள்கி
றேன்.
- ஆசிரியர்.

## கேள்விகள்: மேல்- கீழ்

7-2: மன்னர்கள் அரச அவையில் வீற்றிருக்கும் ஆசனம் இது.
7-11: யாழ் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் அமைந்தும், பிரபல்யம் மிக்க கல்லூரிகளில் ஒன்றானதும் இதுவே.
20-13: திசைகள் பலவிதம், அதை இப்படியும் சொல்லலாம். இது இங்கு குழம்பியுள்ளது.
22-26: கலைகளில் இதுவுமொன்று, இந்தக் கம்படி விளையாட்டை "—" சுற்றுதல் எனவும் அழைப்பர். இது குழம்பியுள்ளது.
27-29: எமது நாட்டு பல ஆசிரியர்களிடம் உள்ள இது, சிறு வகைத் தானியத்தின் பெயருமாகும்.
33-31: தானியங்களை மாவாக்குவதற்கு இந்தக்கல்லையும் பயன்படுத்துவர்.
34-38: இதனை மதியால் வெல்லலாமென பழமொழி கூறுகின்றது.
37-38: (—) எதுவித கருத்துமற்றுள்ளது.
40-46: அரச காரியங்களில் பதிக்கப்படும் இலச்சினைக்குச் சமமான இந்திப் பெயரொன்றே இது குழம்பல்.
48-46: அரி: சிங்கமென்றால், பரி: —? அதுவே இது.
50-51: (—) எதுவித கருத்துமற்றுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறுக்கெழுத்துப் போட்டி இல: 6ன் விடைகளும், பரிசில்களுக்குரியோர் பெயர் விபரங்களும்:

## விடைகள்

### இட - வலம்:

2.38: மனவருத்தம் (ஒன்ற எழுத்து தவறுதலாக விடப்பட்டுள்ளது)
5.18: தனிமை
6.46: அந்தமான் தீவு
7.33: கதிர்
14.39: மும்மாரி
24.16: தாலி
31.48: மஞ்சீதி
36.25: அருமை
42.50 வாவி


### மேல் - கீழ்:

7.1: கந்தன் கருணை
7.9: கன்னி
14.16: மூதலி
20.18: தி.தீ
23.26: மைதானம்
27.28: (ஏது பொருளுமற்றது)
33.30: தருமர்
36.35: அனுமார்
38.39: மரி
42.-: வா
44.45: நீவு
48.52: திராவிடன்

### பரிசில்களுக்குரியோர்:

1: R. KARUNAGARAN, BIRKHØJTERRASSARNE - 436 E, 3520 FARUM.
11: S. SANTHINI, VESTERGADE-49, 4340 TØLLØSE.
111: R. BASKARAN, BØGEHAVN - 3 I, 8370 HADSTEN.

குறுக்கெழுத்துப் போட்டி: 6



www.tamilarangam.net



# முடிவில்லாத ஆசைகள்

1985 இல்

சொந்த மண்ணில்
அமைதி இன்மையால்
பாதுகாப்பு நாடி
அவன்
விமானத்தில் பறந்தது
என்னவோ
மேற்கு ஜேர்மனிக்கு !

1987 இல்

திருமணம் செய்து
ஆசைக்கு ஒன்றை பெற்றும்,
மனைவி மழலையுடன்
இணைந்து வாழ முடியாத
அகதி அந்தஸ்து இல்லாது,
நகர் விட்டு
நகர் செல்ல முடியாது
வாழும் இழி நிலைக்கு,
அகதியாயினும்
கௌரவ அகதியாக வாழ
அவன்
தரை வழி வந்தது
டென்மார்க்கிற்கு !

www.tamilarangam.net



1989 இல்

உறவினர் தம்
ஏக்கத்துடன்,
பிள்ளைகள் இரண்டின்
எதிர் காலத்திற்கும்
ஆங்கில மொழியின்
அவசியத்தை
அவன்
புரிந்து கொண்ட போது
குடும்பம் சகிதமாய்
பயணம் செய்தது
கனடாவிற்கு !

1990 இல்

இருவர் உழைத்தும்
கையில் நாலு காசு
மிஞ்சாத
பொருளாதார சிக்கலிருந்து
விடு பட
அவன்
இப்பொழுது நாடி நிற்பது
உங்கள்
நல் ஆலோசனை தவிர
இத்தகைய
பழமொழியை அல்ல
"பல மரம் கண்ட
தச்சன்
ஒரு மரமும்
வெட்டான்"

அலன் அலோஷியஸ்
HERNING




வேண்டி உடுத்துக் கொண்ட இரவல் சேலை.
வாங்கிப் போட்டுக் கொண்ட கிறிஞ் சங்கிலி.

"ஏன்" என்றே புரியாமல் எதிர்வீட்டுக்காரனைப் பார்த்து- எமக்கு
நாமே பூசிக் கொண்ட மைப்பூச்சு.

அன்றனுக்களுக்கு ஆசைப்பட்டு அரேபியாவுக்குப்
போனது போல் இதுவும் ஒரு கான்சர்.

இந்தப் பாழும் உலகில் ஒரு வருடம்
நீச்சலடித்தமைக்கு கொண்டாட்டமா?

www.tamilarangam.net



இல்லை
அடுத்த வருட ஆரம்பத்துக்கு ஆயுத்த விசிலா?

பிறந்து எதைச் சாதித்துவிட்டோம் என
அன்றைக்காவது சிந்திக்கிறோமா?
இல்லை
பிறந்து இந்தப் பூமிக்கே பாரமாக
இருப்பதைத் தான் நினைக்கிறோமா?

வெள்ளைத் தோலைப் பார்த்து வேண்டாத ஆசை.
கறுத்தத் தோலாகவே இருந்திருந்தால் அழகாக இருந்திருக்கும்.
இப்போ கறுத்தத் தோலில் சில வெள்ளைப் புள்ளிகள்.
அவ்வளவு அசிங்கம்!

சரி! சந்தோஷத்தைத் தருகிறது என வைத்துக் கொள்வோம்.
தமிழ், தமிழ், என்று ஏதோ ஒன்று உங்களுடன் ஒட்டிக் கொண்டு
திரிகிறதே.......

பொங்கல் ஒன்று பொங்கிப் - பகிர
யாருக்குத் தான் துணிவிருக்கிறது?

கேசரியும் கேள்வரகும் கொண்டு
விருந்து வைக்க எவருக்கு மன மிருக்கிறது?

வெள்ளைவேட்டிக்குப்பின்னால் மறைவில் உன்ன வேண்டிய
பூதாக்கலச் சோற்றுக்கு முதலே, அவசரப்பட்டு ரெயில்வேஸ்ரேசனில்
அனைவர் முன்னும் கேக்கை வெட்டி உண்டு விட்டதனால்.....
அது இங்கே பின்னரையையும் தொற்றி விட்டது.

ஆம்!
பரம்பரை இயல்புகள் கடத்தப்படுவது
பெற்றோரின் ஊடாகத்தான்.

— தொடரும் —

www.tamilarangam.net



# சோகமான ராகங்கள்.

காதல் கொள்ளும் இதயங்கட்கு
காவியம் என்றும் பிறப்பதில்லை
ஏனெனில் - அங்கு கண்ணீர் சிந்தப்படுகிறது!

காதல் வசப்படும் ஜீவன்களுக்கு
என்றும் மரணம் சம்பவிப்பதுண்டு
ஏனெனில் - அங்கே மதில் எழுப்பப்படுகின்றது!

காதல் உலகில் பிரவேசிப்பவர்கள்
என்றும் கைது செய்யப்படுகின்றார்கள்
ஏனெனில் - காதலுக்கு சாட்சிகள் இருப்பதில்லை!

காதல் வசப்படும் உள்ளங்கட்கு
என்றும் காயங்களே வருவதுண்டு
ஏனெனில் - அங்கு சித்திரவதையே நடக்கிறது!

காதல் கீதங்களுக்கு என்றென்றும்
சோகங்கள் தான் ராகங்கள்
ஏனெனில் - அங்கு அமங்கலமே இசைக்கப்படுகிறது!

எஸ். பிறேம்
Herning

---

ஒரு பாடசாலை திறப்பது - ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்கு ஏதுவாகும்.

- இங்கர்சால் -

www.tamilarangam.net



# பரத நாட்டியம்

கி.பி 11ம் நூற்றாண்டிலிருந்து இக்கால கட்டம் வரை



தமிழ் பண்பாட்டின் தனிச்சிறப்பின் எடுத்துக் காட்டும் கலைகளில் பரத நாட்டியம் நன்கு குறிப்பிடத்தக்கது. காலந்தோறும் பல்வேறு கலைஞர்களும், புரவலர்களும் இக்கலையை நன்கு போற்றி வளர்த்து வந்துள்ளனர். தென்னிந்தியா, தமிழ்நாடு, ஆகிய இடங்களில் ஆடப்பட்டுவரும் உயர்தர நடனம் இதுவேயாகும். இது தஞ்சாவூர், சென்னை ஆகிய இடங்களில் சிறப்புற்று விளங்குகின்றது. இக்கலை ஆரம்ப காலத்தில் (11ம் நூற்றாண்டில்) எவ்வாறு தோன்றியதென்றும் இக்காலகட்டத்தில் இதன் நிலைபற்றியும், இக்கலையை போற்றிப் பாதுகாத்த, தற்போது பாதுகாக்கின்ற கலைஞர்கள் பற்றியும் உற்று நோக்குவோமாயின்

கி.பி 9ம் நூற்றாண்டிற்கும் 11ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்துக் கல்வெட்டுக்களை ஆராயும் போது அக்கால கோயில் வளர்ச்சியோடு உயர்தர நடனமும் இடம் பெற்றதை காணக்கூடியதாயுள்ளது. இந்நடனத்தை ஆரம்பத்தில் தஞ்சாவூர் சிவன்கோ

www.tamilarangam.net



-வியில் 400 தேவரடியார்களும், காஞ்சிபுரத்தில் 100 தேவரடியார்களும் கோவிலோடு தொடர்புடையவர்களாக இருந்து ஆடிவந்தனர். தேவர் அடியார்களென இவர்களுக்குப் பெயர் வரக்காரணம் என்னவெனில், ஆரம்பத்தில் இவர்கள் கோயிலிருந்து இறைவனுக்குத் தொண்டு செய்வதையே பணியாகக் கொண்டும், இறைவனால் ஆடப்பட்ட நடனத்தை ஆடிவருபவர்கள் என்பதனாலும், இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் "சடத்து" "சதிர்" என்ற பெயரிலேயே இந்நடனத்தை ஆடிவந்தனர். கோவிலோடு தொடர்புடையதாய் இந்நடனம் இருந்த காரணத்தினால் மக்கள் மத்தியில் மிகவும் போற்றப்பட்டு வந்தது.

ஆனால் காலப்போக்கில் துரதிஸ்ரவசமாக தேவரடியார்களின் வாழ்க்கையில் இழிவுநிலை ஏற்பட்டது. கோயில்களில் ஆடிவந்த இவர்கள் அரசர்களின் சபைகளில் நடனம் ஆடி பணம் சம்பாதித்ததும், பின்னர் தம்மை அரசர்களிடம் அர்ப்பணித்தும் வாழத் தொடங்கினர். இவற்றிற்கு மேற்கு நாட்டவரது கலாச்சாரமும், சமூகச் சீர்திருத்தக் கொள்கையின் தாக்கமும், தேவரடியார்களின் பொருளாதார இறக்கமும் காரணமாக இருந்திருக்கலாமென சிலர் கருதுகின்றனர். இதன் பின் தேவரடியார்கள் என அழைக்கப்பட்ட இவர்கள் "தேவதாசிகள்" எனச் சமுதாயத்தில் இக்கலையும் விலைமாதருக்குரிய கலையென ஒதுக்கித் தள்ளப்பட்டது. இவ்விழிவு நிலை 1925ம் ஆண்டுவரை நீடித்தது.

பின்னர் கோவில்களில் இக்கலை ஆடப்பட்டு வருவது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டது. இக்காலப் பகுதியில்த்தான் திரு. இ. கிருஷ்ணஐயரும், வேறு சிலரும் இக்கலையின் சிறப்பினையும் புனிதத் தன்மையினையும் கருத்திற் கொண்டு, அதன் புனருத்தாரணத்திற்காக அரும்பாடுபட்டனர். இவரது அரிய சேவை நடனத்தின் சீர்திருத்தத்தினை தென்னகத்தே கண்டது. இதன் பின்னர் ருக்மிணிதேவி என்னும் அம்மையார், இந்நடனத்தைக் கற்கத் தொடங்கியமை இந்நடன வரலாற்றிலே புதியதோர் அத்தியாயத்தின் தொடங்கும் திருப்புமுனையாக அமைந்தது.

இவர் இக்கலையின் அதன் தூய வடிவத்திலே கற்க விரும்பினார். "சதிர்" கலையை தாசு பழந்த மாணிக்கக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

-கல்லாகவே இவர் கருதினார். இதனைத் தூய்மைப் படுத்த தமக்கு ஒரு நல்ல குருவின் தேடும் முயற்சியிலே முதலில் தேவதாசி குடும்பத்தைச் சேர்ந்தவருமான அபிநயத்தில் மிகுந்த திறமையுடையவருமான மைலாப்பூர் கௌரியம்மாவிடம் நடனம் பயின்றார். பின்னர் புகழ்பெற்ற நட்டுவரான பந்தனைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் முறைப்படி பரதம் கற்றார். இவர் தான் கற்றவை யாவற்றையும் ஏற்றிலர். தமது அறிவுப்படி தூய்மையானவற்றை மட்டும் ஏற்றும், ஏனையவற்றைக் கைவிட்டார். நடனத்தில் இடம்பெற்ற பதவர்ணம் முதலியவையில் கலை ஆதரவாளரான மன்னரையும் ஜமின்தார்களையும் பற்றிய பாடல்களைத் தவிர்த்து, இறைவனைப் பற்றிய பாடல்களாக மாற்றினார். இறைவனுக்குப் பதிலாக மனிதனைப் போற்றுதல் தவறாகும் என்பது ஆணித்தரமான கருத்தாகும். இவர் நடனத்தில் ஆடையணிகளில் கூட கவனம் செலுத்தினார். மிக மிக பளபளப்பான சினிமா நடிகைகள் அணிவது போன்ற கவர்ச்சியுள்ள உடைகளை இவர் விரும்பவில்லை. கவர்ச்சியற்ற எளியமுறையில் இந்தியப் பாணியிலான உடைகளையே பெரிதும் விரும்பினார். நடனம் ஆடும்போது பயன்படுத்தும் முத்திரைகளிலும் முகபாவங்களிலும் ஒரு கட்டுப்பாடு இருந்தது. தவறான முறையில் இடுப்பை நெளித்தலோ, வாய் சுழித்தலோ இவரது பாணியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில ஆண்டுகளின் பின்பு அம்மையார் "கலாஷேத்திரா" என்னும் புனித கலைக்கூடம் ஒன்றை நிறுவினார். ஆரம்பத்தில் இக்கலையைப் பயில மக்கள் அஞ்சினர், பின்னர் இதன் புனிதத்தன்மையை உணர்ந்து பயில விரும்பினர். முதலில் ஒரு சில மாணவர்களுடன் தொடங்கிய இக்கூடம் தற்பொழுது பெருவாரியான மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றுச் செல்லும் ஓர் பெரிய நுண்கலை நிறுவனமாக விளங்குகின்றது. இங்கு பரதநாட்டியம், கதக்களி, கர்நாடக இசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், ஓவியம், முதலிய பிரதான பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றது. ஆரம்ப காலச் சதிர் எனப் பெயர்பெற்ற நடனம் பிற்காலத்தில் பரதநாட்டியம் (அதாவது பாரதநாட்டின் நாட்டியம்) எனப் பெயர்பெற்று புதுப் பொலிவுடன் விளங்க ருக்மணிதேவி போன்ற கலைஞர்களே

www.tamilarangam.net



காரணமாகின்றனர். பரதநாட்டியம் முறைப்படி பயில வே-
-ண்டுமாயின் சமஸ்கிருதம், அலங்கார சாஸ்திரம் இந்
-திய மெய்யியல், பொதுக்கல்வி என்பன தேவையெனக்
கருதி அப்பாடங்களையும் இந்நாட்டியப் பள்ளியில் பாட
நெறிகளாக சேர்த்துக் கொண்டுள்ளார். இங்கு இந்தி
-ய மக்கள் மட்டுமன்றி, இலங்கை, சிங்கப்பூர், கனடா, மலே-
-சியா, யப்பான், ______ மேற்கு ஐரோப்பா, ஐக்கிய அமெ-
-ரிக்கா போன்ற பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள்
இங்கு வந்து கலை பயிலுகின்றனர். எனவே இங்கு பெரு-
-ம்பாலும் ஆங்கிலமே போதனா மொழியாக கற்பிக்கப்படு
-கின்றது. ஆண்களும் பெண்களும் இனமத பேதமின்றி இங்கு
பயிலுகின்றனர். இங்கு பயிலுவோருக்கு, நாலாண்டுக் கால
முடிவிலே "டிப்ளோமா" பட்டம் வழங்கப்படும்.



இவ்வாறு விலைமாதர்களின்
கலை என ஒதுக்கித் தள்ளப்பட்ட "சதிர" புனிதப்படுத்தி அதைப்
பாடநெறிகளுடன் ஒன்றாக சேர்த்துக் கொண்ட பெருமை இவ்-
அம்மணியையே சாரும். தற்பொழுது அவர் இவ்வுலகை விட்டு-
-ச் சென்றாலும் அவரது பணியை சிஷ்யைகள் தொடர்கிறார்கள்
என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து பரதநாட்டியக் கலையை தற்-
-போது பாதுகாத்து வருகின்ற கலைஞர்களில் முதல் இடம்பெறு-
-வர் "டாக்டர் பத்மா சுப்ரமண்யம்" அவர்கள். இவர் நாட்டி-
-யத்திற்கே தன் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்பவர். அண்ணா-
-மலைப் பல்கலைக் கழகத்திலிருந்து நாட்டியத்தில் டாக்டர் பட்டம்
பெற்றவர். இவர் இக்கலையுலகத்திற்குச் செய்யும் சேவை
அளப்பரியது. கரணங்களில் 108 கரணங்களையும்

www.tamilarangam.net



செய்து காட்டியவர். ஒரு காலால் சிவன் போன்றும் மறுகாலால் உமை போன்றும் "அர்த்தநாதீஸ்வரர்" போன்று ஆடி மக்களை பரவசப்படுத்தியவர். தற்பொழுது ஏழை மாணவிகளுக்கு இலவசமாக நடனக்கல்வி அளிக்கும் "நிருத்யோதயா"வின் இயக்குனராக இருந்து பணியாற்றி வருகின்றார். இவரது நடனத்தை கண்டு வியக்காத கலைஞர்களே இல்லையெனலாம்.

இவ்வாறு பரதநாட்டியம் என்னும் அரும்பெரும் பொக்கிஷத்தை பாதுகாத்து வரும் கலைஞர்களில் வழுவூர் இராமையாப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். நாட்டியக்கலைஞர்கள் பற்றிக் கூறிக் கொண்டு போனால் இன்னும் ஏராளமானோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இங்கு முக்கியமான சிலரைப் பற்றியே இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.


ஆரம்பத்தில் பரதநாட்டியம் எவ்வாறு இருந்ததென்றும், அதன் வளர்ச்சியும், பின்பு அதன் வீழ்ச்சியும் அதற்குரிய காரணங்கள் பற்றியும் பின்பு அதன் புனருத்தாரணத்திற்கு காரணமாயிருந்த கலைஞர்கள் பற்றியும் அவர்கள் மீண்டும் இக்கலையை எவ்வாறு வளர்த்தார்கள் என்பது பற்றியும் தற்போது பாதுகாத்து வரும் ஒரு சில கலைஞர்கள் பற்றியும் பார்த்தோம். இனி இக்கலையின் இக்காலகட்டத்தில் அதாவது தற்போதைய நிலைபற்றி (தென்னிந்தியா, தமிழ்நாடு மட்டுமல்ல, உலகம் முழுவதும்) மேலோட்டமாக நோக்குவோம்.

முதலில் எமது நாடான இலங்கையை எடுத்துக் கொள்வோமாயின் இன்று சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த ஆவல் உண்டுபண்ணும் நடனம் பரதநாட்டியமாகும். ஏராளமான சிங்கள மாணவர்கள் மத்தியில் மிகுந்த ஆவல் உண்டு பண்ணும் நடனம் பரதநாட்டியமாகும். ஏராளமான சிங்கள மாணவர்கள் தமிழ் ஆசிரியர்களிடம் பரதநாட்டியம் பயின்று மேடைகளில் ஆடி வருகின்றனர். இது பெரும்பாலும் கொழும்பு மாநகரத்தில் காணக்கூடிய ஒரு செயலாகும்.

அடுத்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இதன்பரவலான வளர்ச்சியை கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. 1972ம் ஆண்டு பாடசாலையில் பாட நெறியாக பரதக்கலை பிரகடனப்படுத்தப்பட்டது. இக்கலையை

www.tamilarangam.net





வளர்க்கும் நோக்கோடு பாடசாலைகளுக்கிடையில் நடன, சங்கீத நாடகப் போட்டிகள் அரசாங்கம் நடாத்தியும் வருகின்றது. ஆரம்பத்தில் இராமநாதன் கல்லூரி பரத நாட்டியப் போட்டிகளில் முன்னணி வகித்து அகில இலங்கை ரீதியில் ஏராளமான முதற் பரிசில்களைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் சகல தமிழ்ப்பாடசாலைகளும் நடனப் போட்டிகளில் பங்கு பற்றுகின்றது. எந்தப் பாடசாலை முதலிடம் பெறும் என்று முன்கூட்டியே சொல்ல முடியாத அளவுக்கு உள்ளன. ஏனெனில் நடனப் போட்டிகளில் சில பின்தங்கிய கிராமியப் பாடசாலைகள் கூட போட்டிகளில் பல வெற்றிவாகைகளைச் சூடி விடுகின்றன. இதற்குக் காரணம் அங்குள்ள நடன ஆசிரியர்களின் ஊக்கமும் அயராத உழைப்புமே.

தற்போது யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வரை பரதநாட்டியத்திற்கு இடம் கிடைத்துள்ளது. இது யாழ்/பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவின் கீழ் இயங்கி வருகின்றது. அதாவது நுண்கலைப்பிரிவு (Faculty of fine arts) என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இங்கே "கலாஷேத்திரா" பாணியிலே நாட்டியம் பயிற்றப்பட்டு வருகின்றது. இங்குள்ள தலைமை நடன ஆசிரியரான சாந்தா-பொன்னுத்துரை திருமதி ருக்குமணி தேவியிடம் நேரடியாகப் பரதம் பயின்றவர். இந்தியாவில் பயின்ற வேறு சில கலைஞர்களும் இவருடன் சேர்ந்து பரதநாட்டியக் கலைமணிகளை உருவாக்கி வருகின்றனர்.

இங்கு க.பொ.த உயர்தரம் வரை நடனம் பயின்ற மாணவ, மாணவிகளே பெரும்பாலும்

www.tamilarangam.net



நாட்டியத்தைப் பிரதான பாடமாகப் பயிலுகின்றனர். இங்கு பயிலும் ஒருவர் பிரதான பாடமாகப் பரதநாட்டியம் பயி-ன்றல் உபபாடமாக (சங்கீதம், வீணை, வயலின், மிருதங்கம்) இதில் ஒரு பாடத்தை உபபாடமாகப் பயில வேண்டும். இவை தவிர பல்கலைக் கழகத்தில் தென்னாசிய கலை வரலாறு சமஸ்கிருதம், தமிழ், நாட்டிய சாஸ்திரம் ஆகிய பாடங்கள் அங்குள்ள பேராசிரியர்களிடம் பயில வேண்டும். நாலாண்டு கால முடிவின் பின் நாட்டியக்கலைமணி என்ற பட்டத்தை இங்கு நாட்டியம் பயில்பவோர் பெறுவர். யாழ்/ பல்கலைக்கழக பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே இந்நுண்கலைப் பிரிவுக்கு தலைமையாளர் ஆவர். இந்நுண்கலைப் பிரிவை மேன் மேலும் சிறப்பிக்க அரும்பாடுபட்டு வருபவர்களுள் திரு வி. சிவசாமி அவர்களும் (MA சமஸ்கிருதத்துறை விரிவுரையாளரும்) DR. மௌனகுரு போன்ற விரிவுரையாளர்கள் குறிப்-பிடத்தக்கவர்கள். இவர்களது நோக்கம் என்னவெனில் இங்கு பரதநாட்டியம் படித்துப் பட்டம் பெறும் மாணவமாண-விகள் இங்கு கற்றவற்றை அடித்தளமாகக் கொண்டு மேலும் புதுப்புது வடிவங்களை கையாள வேண்டும் என்பதே ஆகும்.

அடுத்து வெளிநாடுகளை எடுத்துக்கொண்டால் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பரதநாட்டியத்திற்குத் தனிமரி-யாதையுண்டு. முறையாகப் பரதநாட்டியம் பயின்ற இந்திய கலைஞர்கள் இன்று பல நிறுவனங்களை நிறுவி நாட்டியப் பள்ளி நடத்துகின்றனர். இதே போல் அமெரிக்காவிலும் பரதநாட்டி-யப்பள்ளிகள் நடத்துகின்றனர். இன்று ஜேர்மனி, யப்பான், யாவா, இலண்டன் போன்ற நாடுகளிலும் இதன் வளர்ச்சி-யைக் காணக் கூடியதாயுள்ளது. ஆங்காங்கே சில நாடு-களில் பரதநாட்டியம் என்ற போர்வையில் சினிமா நடன-ங்கள் இடம் பெற்றாலும் உண்மையான பரதநாட்டியத்திற்கு என்றும் அழிவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் பல நாடுகளில் இக்கலை வியாபித்து வளர்வதை கண்கூடாகக் காணக் கூடியதாயுள்ளது.

தென்னிந்தியாவிலே தோன்றி வளர்ந்த இக்கலை இன்று பல நாடுகளிலுமுள்ள மக்களுக் கவரும் வகையில் வளர்ச்சியுற்று காணப்படுவது குறித்து

www.tamilarangam.net



நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. மேலும், மேலும் இக்கலை வளர பல புதிய புதிய கலைஞர்கள் முன்வர வேண்றும். "சதிர்" என்ற பெயரில் விலைமாதர்களுக்கென சில காலத்தில் ஒதுக்கித் தள்ளப்பட்ட இக்கலை இக்கால கட்டத்தில் உலகளாவிய ரீதியில் வளர்ச்சியுற்று வளர்வ-தற்கு காரணமாயிருந்த கலைஞர்களையும், அதற்காகவே தமது வாழ்க்கையை அர்பணித்து, அதன் புனிதத்தன்மையோடு பாதுகாத்து எமக்கு தந்தவற்றையும் நாம் என்றும் மறந்து விடலாகாது.

எனவே. இப்பரதநாட்டியக் கலையை மிகவும் தூய்மையோடும் புனிதத் தன்மையோடும் பாதுகாத்து வர தமிழ்மக்களாகிய ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இக்கலை மேன்-மேலும் வளர எல்லாம் வல்ல நடராஜர் துணைபுரிவாராக.

முற்றும்.

திருமதி- சுரேந்திரா

# டென்மார்க்குக்கு நன்றி

இலங்கையில் இடம் கேட்டோம் கொஞ்சம்.
தமிழர் வாழ்விற்கு வந்ததே பஞ்சம்
டென்மார்க்கில் நாம் கேட்டோம் தஞ்சம்.
அது வீட்டோடு தந்தது மஞ்சம்.

கிடைத்தது நமது வாழ்விற்கு சாந்தம்
கொண்டோம் இங்கு புதிய பந்தம்
கிடைத்தது எமக்கு இனிய சொந்தம்
தெரியவில்லை தமிழர் வாழ்வின் அந்தம்

நான் என்ற ஆணவத்தை முற்றாக களைவோம்
ஒற்றுமையை நாம் உறுதியாக கொள்வோம்
எந்நாளும் டென்மார்க்கை மறக்காது வாழ்வோம்
மனதாலும் வாயாலும் நன்றிகள் சொல்வோம்.

வசந்திராஜா
Holstebro

www.tamilarangam.net



# சஞ்சீவியின் பக்கம்

கடந்த 15.04.1990 அன்று தமிழர் கலாச்சாரக் கழகம் (கொல்பேக் சுற்று வட்டாரம்) நடாத்திய பொங்கல் விழாவிற்கு எமது அழைப்பிற்கு மதிப்பளித்து விழாவிற்கு வருகை தந்தவர்களிற்கும் மற்றும் அதில் பங்குபற்றிய கலைஞர்களுக்கும் சஞ்சீவியினூடாக எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
நிர்வாகிகள், "தமிழர் கலாச்சாரக் கழகம்".
கொல்பேக் (HOLBÆK).

தலைவர்: ந. சிவபாலன்.
செயலாளர்: சி. தம்பிராஜா.

## டென்மார்க் தமிழ் விளையாட்டுக் கழகங்கட்கு ஓர் அன்பான வேண்டுகோள்

வசந்த கால விளையாட்டுக்களான கிரிக்கட், உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் பயிற்சிகளிலும் விளையாட்டு வீரர்கள் பங்கு பெற வேண்டி, குளிர்கால கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை அதன் குறிப்பிட்ட கால வரையறை வரை நிறுத்தி வைக்குமாறு சகல தமிழ் விளையாட்டுக்கழகங்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"HOLSTEBRO UNITED YOUTH-SPORTS CLUB."

www.tamilarangam.net



சைக்கிளின் பின் ஆசனத்தில் பிரயாணம் செய்து கொண்டே குலைந்த குடுமியை முடிந்து கொண்டிருந்தார் வேலுப்பிள்ளை. அந்த நேரம் பார்த்து "பொலிசு! பொலிசு!!" என்ற சத்தம் வேலுப்பிள்ளையின் காதைக் கிழித்தது.

சைக்கிளில் இரண்டுபேர் பிரயாணம் செய்வது சட்டவிரோதம். அதுவும் பொலிசில் மாட்டுப்பட்டால் பெரும் கரைச்சல் என்று நினைத்தவர் சைக்கிளில் இருந்து பாய்ந்தார். அவருடைய போதாத காலம் அவரது கால் சைக்கிள் கம்பிகளுக்கு இடையே சிக்கிக் கொண்டது.

சைக்கிள் தடம்புரண்டது. கந்தசாமிக்கு பின் வேலுப்பிள்ளை. சமாளித்தபடி இருவரும் எழுந்து கொண்டனர். வேலுப்பிள்ளையால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. காலின் உள்ளங்கை வெட்டுப்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

விழுந்தவர்கள் இருவரும் எழுந்து 'பொலிசு பொலிசு' என்று கத்தியவனைப் பார்த்து "டேய் ஏனடா பொலிசு எண்டு கத்தினனீ? எங்கை பொலிசைக் காணேல்லை. எங்களை விழுத்தவே கத்தினனீ?" இரைந்தார் வேலுப்பிள்ளை.

"ஐயோ இல்லையண்ணை. என்ரை நாய்க்குப் பேர்தான் 'பொலிசு'. சோறுவைப்பமெண்டுதான் வெளியில நிக்குதோவெண்டு கூப்பிட்டுப் பார்த்தனான்."

"நாசமாய்ப் போக, உன்ரை நாயாலை என்னை நடக்கேலாமல் பண்ணிப் போட்டாய்."

வேலுப்பிள்ளை நிலத்தில் குந்தியபடி குடுமியை முடிந்து கொண்டார்.

"கந்தசாமி! என்னாலை இனி நடக்கேலாது. காலும் நல்லா வெட்டுப்பட்டுப் போச்சு. என்னை ஆசுப்பத்திரியிலை கொண்டே விட்டுவிடு."

வேலுப்பிள்ளையின் பரிதாபக் கோலம் கந்தசாமியை இரங்க வைத்துவிட்டது.

வேலுப்பிள்ளையை மருத்துவமனையில் விட்டுவிட்ட கந்தசாமி, சில தோடம் பழங்களை வாங்கிக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து விடைபெற்றார்.

அன்று பகல் முழுவதும் எதுவும் சாப்பிடவில்லை. இரத்தம் போனதால் ஏற்பட்ட சோர்வு. கட்டிலில் சரிந்து சாய்ந்திருந்தார். உறக்கம் கலைந்ததும் பசிக்கொடுமை பிடுங்கவே தோடம்பழத்தில் ஒன்றை உரித்து உண்ணத் தொடங்கினார் வேலுப்பிள்ளை.

www.tamilarangam.net



பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த படுகிழவர், "தம்பி! என்ரை ஆக்கள் இன்னும் வரேல்லை. வந்த உடனை வாங்கித்தாறன், ஒரு தோடம் பழம் தாரும்."

இரவு பத்துமணிக்கு மேல் இருக்கும். கிழவனைத் தாதி மார் கட்டிலோடு தூக்கிச் சென்றனர்.

"இந்தாளை எங்கை பிள்ளையள் கொண்டு போறியள்? எனக்குத் தோடம் பழம் தரவேணும் உந்தக் கிழவன்".

"அவர் மேலே போட்டார்" தாதி பதிலளித்தாள்.

"கிழவன் செத்தே போச்சு. அப்ப என்ரை தோடம்பழம்?"

அவரது கேள்விக்குப் பதில் சொல்ல அங்கு எவரும் இல்லை.

இருளில் தனித்துவிடப்பட்ட வேலுப்பிள்ளைக்கு இனம்புரியாத பயம் ஏற்பட்டது.

"கிழவன்ரை ஆவி இந்த வாட்டைத்தானே போவுது. இச்சாகைதான் அந்த ஆவி உலவும். இன்றைக்கு இருந்தா என்னை உயிருக்குத்தான் ஆபத்து" என்று நினைத்து வைத்தியசாலையை விட்டு எவருக்கும் சொல்லாமல் ஓட்டமும் நடையுமாகச் சென்று ஒரு கோவில் மடத்துக்குள் படுத்துக் கொண்டார். படுத்து சற்று நேரத்தில் "ஐயோ! கள்ளன் கள்ளன்" என்ற பெண்ணின் கூக்குரல்கள். அதைத் தொடர்ந்து வேலுப்பிள்ளைக்குச் சரமாரியான மொத்தல்கள்.

"ஐயோ அடியாதையுங்கோ! பொம்புளை மடமெண்டு தெரியாமை வந்து படுத்திட்டன்."

அங்கிருந்தோடியவர் ஆண்கள் மடத்தில் ஆட்டுப் பிழுக்கைகளும் மூத்திரமும் சேர்ந்து ஒரே நாற்றம். சில ஆடுகள் படுத்திருந்தன. அவைகளுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்

முன்பு தையல் வேலை பார்த்த ஒரு விசரன் அந்த மடத்தில் இருந்ததை வேலுப்பிள்ளை கவனிக்கவில்லை. அகப்பட்டதை எல்லாம் ஒரு கத்திரிக் கோலால் "புதுப்பெற்றான் புதுப்பெற்றான்" என்று சொல்லிக் கொண்டே வெட்டுவது அவன் வேலை.

சில்ட்டைக்கலைபோல வெள்ளை வேலுப்பிள்ளையின் குடுமிதான் அன்றிரவு அவன் வெட்டுக்கு அகப்பட்டது. வேலுப்பிள்ளை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபொழுது அவன் "புதுப்பெற்றான் புதுப்பெற்றான்" என்று சொல்லிக் கொண்டு கத்திரிக்கோலால் வேலுப்பிள்ளையின் குடுமியை நறுக்கிவிட்டான். மிகுதியாக இருந்த தலைமயிர் முழுவதையும் மொட்டையடித்துவிட்டான்.

www.tamilarangam.net


விடியற்காலம் நான்கு மணி. கோவில் அழைப்பு மணி கேட்டு வேலுப்பிள்ளை கண்விழித்தார். கோவிலுக்குச் செல்ல முன்பாக குளிப்பதற்குத் தயாராகி குடும்பியை ஒரு முறை சரி செய்ய பிடரியில் கைவைத்தார். என்ன ஆச்சரியம்! குடும்பி யைக் காணவில்லை. தலையைத் தடவிப்பார்த்தார். மொட்டை யாக இருந்தது.

மனதில் ஒரே ஒரே வியப்பு.

"இது முருகன்ரை அருள்தான். அவன்ரை அருளாலை தான் மயிர் இல்லாமல் போனது. முருகா! உன்ரை அருளை நான் எப்பிடிச் சொல்லுவேன். ஆறுதா! ஆறுதா.. நான் தங்கம் மாவை விட்டிட்டு வந்தபடியாலதான் உன்ரை அருட்கடாட்சம் கிடைச்சிருக்கு. இன்டைக்குத்தான் உன்ரை அருளை அறிஞ்சு கொண்டன்." பரவசத்தில் ஏதேதோவெல்லாம் கூறினார்.

கோவிலுக்குச் சிறிது அப்பால் தெருக்கரையில் இருந்த சலூனுக்குச் சென்று தலையை மொட்டையாக வழித்துக் கொண்டார். கடலில் சென்று நன்கு முழுகிவிட்டு கோவிலுக் குவந்து தன் உடம்பு இரண்டுக்கும் சந்தனம் பூசிக் கொண் டார். அவரது மொட்டைத் தலை சந்தனத்தால் மெழுகப்பட் டிருந்தது.

ஆலயத்தின் வெளிவாசலின் முன்பாக மணற்தரை யில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்து முருகனைப் பற்றிய தேவாரங்களைக் கண்மூடிப் பக்திப் பெருக்கோடு பாடிக் கொண்டிருந்தார்.

ஆலயத்துக்கு முன்பாக கண்பார்வை தெளிவாகத்தெரியாத கிழவி முருகனை வழிபட வந்து கொண்டிருந்தது. முருகனைச் சிரசனம் வணங்கிய கிழவி தேங்காய் உடைக்கும் கல்லை தேடியது. பார்வை தெளிவில்லாததால் கல்லைக் கையால் தடவிப் பார்த்தது...

வேலுப்பிள்ளையின் சந்தனம் பூசியதலைதான் வசமாக அகப்பட்டது. முருகனைத் தோத்தரித்த கிழவி "முருகனுக்கு அரோகரா" என்று சொல்லிக் கொண்டே தேங்காயை ஓங்கி ஒரே அடி.

"என்ரை ஐயோ! என்ரை தலை!! என்ற வேலுப்பிள்ளையின் அலறல். கிழவியும் விஷயம் புரியாமல் "என்ரை ஐயோ" என்று வேலுப்பிள்ளையோடு சேர்ந்து கொண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கார்ட்டூன் படங்கள் என்றால் குழந்தைகள் விரும்பிப் பார்க்கிறார்கள் ஆனால் நான் பார்ப்பது வேறு கோணத்தில் தான், வால்ட்டிஸ்னியின் கார்ட்டூன் படங்களை வீடியோ கேஸட்டில் போட்டுப் பார்க்கும்போது எத்தனை டென்ஷன் இருந்தாலும் மனம் லேசாகிவிடுகின்றது. அது மட்டுமல்ல தியானம் செய்யும்பொழுது (meditation) ஏற்படும் உணர்வு ஏற்படுகிறது. மனம் ஒருமுகப் படுத்தப்படும் போது ஏற்படும் உன்னத நிலையினை அனுபவிக்க முடிகின்றது. படம் முடிந்த பிறகு புத்துணர்ச்சி பெறுகிறேன்.
இப்படிச் சொன்னவர் யார்? ஓவியர் மணியன்செல்வன் - குமுதம் 06-05-1988 -

---

வேலுப்பிள்ளையின் தலை உடைந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

வீடு நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றார்.

"தங்கம்மா!... தங்கம்மா!... கண்களில் நீர்ததும்ப தழுதழுத்த குரலில் மனைவியை அழைத்தார்.

அவரது கோலத்தைக் கண்டவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கணவனை ஒருவாறு அடையாளம் கண்டவளுக்கு துக்கம் தாளவில்லை.

"என்ன ஐயோ! இது என்னப்பா கோலம். உங்களுக்கு என்னதான் நடந்தது. சொல்லுங்கோவன். மண்டையெல்லாம் இரத்தம் வழியுது!" பதறியபடி கணவனைப் பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிடு தங்கம்மா. உன்னைவிட்டுட்டுப் போனபடியாலதான் எனக்கு இந்தக் கதி. இனிமேல் உன்னை விட்டிட்டு எங்கையும் போமாட்டன். எனக்கு நீதான் எல்லாம். நீதான் உலகம்."

மனைவியின் இதமான அணைப்பில், அவளது மடியில் முகம் புதைத்து விம்முகிறார் வேலுப்பிள்ளை.

கணவனின் திடீர் பக்திக்கு நேர்ந்த பரிதாபக் கதையைப் புரியாமல் சிந்தனை வசமானாள் தங்கம்மா.

(யாழும் கற்பனை)

www.tamilarangam.net





# நீச்சல் சாதனை வீரன் லாஸ் அவர்களுடன் சில நிமிடங்கள்

பேட்டி முரளி- மகேஸ்

நீச்சல் போட்டியில் இன்றைய நிலையில் உலகின் முதலாவது வீரனாகவும் டென்மார்க்கின் சிறந்த வீரரும், கொல்ஸ்ரப்புறேவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. லாஸ் சோரன்ஸன் (Lars Sørensen) அவர்களை சக்தியின் சார்பில் இங்கு பேட்டி காண்பதில் நாம் இங்கு மிகவும் பெருமிதம் அடைகின்றோம்.

முன்னேற்பாடாகச் செய்து கொண்ட நேர ஒதுக்கின் படி சுமார் எட்டு மணிபோல் நானும் எனது நண்பன் மகேசனும் அவரது வீடு நோக்கிச் சென்றோம். ஒரு பெரியவரை, உலகப்புகழ்பெற்ற ஒரு வீரனைச் சந்திக்கப் போகின்றோம் என்ற பெருமையும் எம்மோடு எப்படிப்படி குகின்றார், எம்மை ஒரு பெரிய பத்திரிகைக் காரர் என நினைத்துக் கொண்டிருக்கின்றாரா என்ற பயமும் தயக்கமும் கொண்ட மனநிலையோடு அவரது வீட்டு அழைப்பு மணியை அழுத்தினோம்.

லாஸ் எம் இருவரையும் இன்முகம் காட்டி வரவேற்றார். நீங்கள் கோப்பி குடிப்பீர்கள் தானே என்று கேட்ட வண்ணம் அருகிலிருந்த கதிரைகளில் அமரச் சொன்னார்.

யாரும் பார்த்தவுடனேயே ஏதாவது ஒரு விளையாட்டிலாவது சிறந்து விளங்கக் கூடிய — நெடித்த கட்டமைப்பான அவரது உடலமைப்பு. எம்மில் (தமிழர்கள்)

www.tamilarangam.net



பலரது வயிறையும் அப்படி அரிசியையும் பருக்களையும் நினைத்-
-துச் சிரித்துக் கொண்டேன்.

எளிய அமைப்பிலான மிகவும் சாதாரண-
-மான அவரது அறிவிடம், அங்கு இசைத்துக் கொண்டிரு-
-ந்த அந்த இசையும் சின்னஞ்சிறிய அமெரிக்கன் Bose இல்
கணீர்கணீர் என்ற விதமும் எம் இருவரையும் மிகவும் உற்சாகப்
படுத்தியது.

நீங்கள் என்ன பத்திரிகையை நடத்துகின்றீர்-
-கள்? என்று என்னைக் கேட்டார். நான் எதிர்பார்த்து
போல் அந்த ஏழு மலர்களையும் அவர் முன் தூக்கி வைத்தே-
-ன். ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு கலரில் இருப்பதும், புத்-
-தக அமைப்பு முறையும் மிகவும் அழகாக இருக்குது
என்றும் உள்ளே இருக்கும் விடயங்களும் நல்லாயிருக்-
-கும் என்றே நினைக்கின்றேன் என்றார். எமது வேறு கதைகள்
பின்பு கதைப்போம் எனமுடிவெடுத்து விட்டு பேட்டியை
ஆரம்பித்தோம்.

கேள்:- நீங்கள் நீச்சல்த் துறையில் ஈடுபடக் காரணம் யாது?
எப்போது உருவானது, யாரால் உருவாகியது?

பதில்:- எனக்கு ஏழுவயது இருக்கும் போதே தண்ணீரில்
விளையாட ஆரம்பித்து விட்டேன். இருந்தும் தலையில்
தண்ணி படுவது எனக்குப் பயமாகவே இருந்தது. கால-
-ப் போக்கில் அது மிகவும் சாதாரண ஒன்றாகி விட்டது.
எங்கள் குடும்பத்திலே எனது அண்ணன் ஒரு சிற-
-ந்த நீச்சல் வீரர். பல போட்டிகளில் பங்குபற்றியிருக்-
-கின்றார். அவரது செயற்பாடுகளும், முயற்சியும் தான் என்னை
இத்துறையில் ஈடுபடச் செய்தது.

கேள்:- நீச்சல்த் தடாகத்தை விட வேறு நீர்நிலைகளில்
நீந்தியிருக்கின்றீர்களா? அப்படியாயின் இரண்டு நிலைக-
-ளுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

பதில்:- தடாகத்தை விட, கடல் ஆறு போன்றவற்றில் நீந்தியிரு-
-க்கின்றேன். தடாகத்தில் நீந்தும் போது ஒரே அளவான

www.tamilarangam.net



நீர் ஓட்டமாகவும் ஒரேயளவு வெப்பநிலையாகவும் இருக்கும். ஆனால் ஆறு கடல் போன்ற இடங்களில் நீந்தும் போது வெப்பநிலையும், நீர் ஓட்டமும் மாறுபட்டவையாகக் காணப்படும். நீச்சல் வீரர்களுக்கு அலை எப்போதும் இடைஞ்சலாகவே இருக்கும். நீந்தும்போது கடல் அடியைத் தெளிவாகப் பார்க்கமுடியாது ஆனால் நீர்த்தடாகத்தில் தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம்.

கேள்வி:- எந்தெந்த நாடுகளில் போய் நீந்தியிருக்கின்றீர்கள்?

பதில்:- சர்வதேசரீதியாகப் பல நாடுகளில் போய் நீந்தியிருக்கின்றேன். பல போட்டிகளில் பங்கு பற்றியிருக்கின்றேன். உ+ம்:- அவுஸ்ரேலியா, ஹொலாந்து, கொரியா, போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

கேள்வி:- எப்படியான நீந்தலில் உங்களுக்கு மிக ஆர்வம் உண்டு?

பதில்:- தற்போது "MEDLEY" என்று சொல்லப்படுகின்ற நீச்சல் தான் எனக்கு அதிகம் பிடித்தமானது. ஆனால் 1989ம் ஆண்டளவில் "RYG CRAWL" என்ற பிரிவுநீச்சலையே நீந்தி வந்தேன். தற்போது இந்த நீச்சலைக் கொஞ்சம் 'MEDLEY' என்ற நீச்சல் பிரிவையே கூடுதலாகப் பயிற்சி செய்து வருகின்றேன். சென்ற வருடம் நடைபெற்ற டென்மார்க்கின் சிறந்த வீரர்களுக்கான போட்டியில் 'RYG CRAWL' என்ற முறையையும், இந்த வருடம் நடைபெற்ற போட்டியில் 'MEDLEY' என்ற முறையையும் பயன்படுத்தி வெற்றியீட்டியுள்ளேன்.

[சென்ற வருடம் நடைபெற்ற போட்டியில் வட ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் இருந்த சாதனையை முறியடித்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியதும், இன்றைய உலக நீச்சல் போட்டியில் முதலாவது இடத்தை வகிக்கும் இவர் ஏற்கனவே இருந்த உலக சாதனைகளின் வரிசையில் மூன்றாவது சிறந்த வீரராக விளங்குகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net



கேள்வி:- உலகநீச்சல் போட்டியில் கலந்துகொண்ட போது உங்களது மனதில் எப்படியிருந்தது.

பதில்:- முதலாவதாக எனக்கு ஏற்கனவே இப்பெரிய போட்டி-யில் அனுபவம் இல்லாததாலும் ஏற்கனவே அங்கு போட்டி-க்கு வந்தவர்களைப் பற்றி அறிந்திருந்தவைகளும் என்மன-தை மிகவும் தளரச் செய்தது. ஆரம்பத்தில் போட்டிக்கு வந்த வீரர்களிலும் கூட அதிக வெறுப்பும் ஒருவகைப் பொறாமையும் ஏற்பட்டது, இது எனக்கல்ல எல்லோருக்-கும் இருக்கும் ஒரு மனநிலைதான். காலப் போக்கில் அனுப-வத்தால் இது நீங்கும்.

கேள்வி:- இங்கு வாழும் சில வீரர்கள் வெளிநாடுகளில் போய் வாழ்ந்து தொழிலாக வைத்து வாழ்ந்து வருகின்றார்கள் நீங்கள் ஏன் அப்படி விரும்பவில்லை?

பதில்:- நான் ஏற்கனவே ஆறுமாதம் அமெரிக்காவில் வாழ்ந்-தேன். நீச்சலைப் பொறுத்தவரையில் அந்த நாட்டு வீரர்க-ளது மனநிலையும் வாழ்க்கை முறையும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் திரும்பவும் டென்மார்க் வந்துவிட்டேன்.

கேள்வி:- அமெரிக்காவை விட டென்மார்க் எந்த வகையில் சிறந்தது எனக் கருதுகின்றீர்கள்?

பதில்:- அங்கே பயிற்சி எடுக்கும் வீரர்கள் மிக அக்கறை கொண்டு எடுப்பதில்லை. அத்தோடு பயிற்சிகள் முடிவடைந்-தவுடன் குறைந்தது ஐந்து, அல்லது ஆறு பியரைக் குடி-ப்பார்கள். இது எனக்கு முறைமையாகப் பிடிக்கவில்லை, ஒத்-தும் வராது. ஆனால் டென்மார்க்கில் ஐந்து நாட்களிலும் பயிற்சி செய்யலாம், பயிற்சி முடிந்தவுடன் வீட்டில் வந்து நிம்மதியாகவும் இருக்கலாம். நானும் சனி ஞாயிறு நாட்களில்-தான் குடிப்பதுண்டு, அதுவும் மிக அளவோடு. ஒவ்வொரு நா-ளும் குடித்தால் உடம்பு கெட்டுவிடும், குடிப்பதால் எமது உடலைத் திடமாக வைத்துக்கொள்ள முடியாது. படிப்பைப் பொ-றுத்தவரையிலும் அமெரிக்காவிலுள்ள அதே விடயங்களையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கே பழகலாம்.

கேள்வி:- ஏதாவது ஆபத்துக்களைச் சந்தித்திருக்கின்றீர்களா?

பதில்:- நீச்சல் வந்து மற்ற விளையாட்டுக்களைப் போல் ஒரு பாதிப்பும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் ஆபத்து என்பது மற்ற நாடுகளுக்கு விமானம் மூலம் போய் வருவது தான் என நினைக்கின்றேன் என சிரித்துக் கொண்டே கூறினார்.

கேள்வி:- வளர்ந்து வரும் புதிய புதிய நீச்சல் வீரர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில்:- பயிற்சிகளை தொடர்ச்சியாகக் கவனமாக எடுக்க வேண்டும். தோல்விகளைக் கண்டு துவளக் கூடாது, உடல் எப்போதும் இலகு நிலையில் வைத்திருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சிக் குடிக்கக் கூடாது, இது போன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டு பயிற்சிகளைச் செய்து வந்தால் பல வெற்றி வாகைகளைச் சூடிக் கொள்ளலாம்.

கேள்வி:- உங்களுடைய அபிமானிகளிடமிருந்து ஏதாவது தொல்லைகள் இருக்கின்றதா?

பதில்:- எனக்குக் குறிப்பிடும்படியாக பெரிதாக ஒன்றுமில்லை. ஜேர்மனியிலிருந்து கொஞ்சக் கடிதங்கள் வருவதுண்டு, எனக்குப் புகழ்ச்சியையோ, பிரபல்யப்படுத்துவதோ பிடிப்பதில்லை, மிகவும் சாதாரணமாக வாழப் பெரிதும் விரும்புகின்றேன்.


இனிவரும் போட்டிகளில் நீங்கள் முதலாவது சிறந்த வீரனாக விளங்க வேண்டும் எனச் சுவிஸின் சார்பிலும் எங்கள் தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துகின்றோம். சிரமம் பாராது இந்தப் பேட்டியை தந்ததற்கும் எம் நன்றிகள். பதிலுக்கும் அவர் நன்றிகள் தெரிவித்தார்.

- முடிவு -

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி : 7




கருத்துக்கள்:

அவலவலகப்பாவணைக்த:

உள்ளே மடிக்குக!

இங்கே வெட்டுக:

www.tamilarangam.net

»CHANCHIVE«

Postbox: 1205

7500 Holstebro .

Nr: 7.

afs.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"CHANCHIVE"
Postbox: 1205
7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்